ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமத் வரவர முனயே நம:



## ஸ்ரீவைஷ்ணவ

# திருவாராதன க்ரமம்



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஜீயர் திருவடிகளே சரணம்

# திருவாராதன க்ரமம்

முகவுரை....4
மந்த்ரஸ்நானம் ....5
திருத்துழாய் எழுந்தருளச் செய்தல் ....6
குருபரம்பரை தியானம் ....7
கோவிலாழ்வார் திருக்காப்பு நீக்குதல் ....10
எம்பெருமான் திருப்பள்ளி உணர்த்துதல்....11
பாத்திர பரிகல்பநம்....15
மானஸீக ஆராதனம் ....17
மந்த்ராஸனம்....21
ஸ்நானாஸனம் ....22
அலங்காராஸனம் ....35
மந்த்ர புஷ்பம் ....41
திருநாம அர்ச்சனை ....45
அருளிச் செயல் ஸேவாகாலம்....47
போஜ்யாஸனம் ....49
புநர்மந்த்ராஸனம் ....54
கற்பூர ஆலத்தி ....56
சாற்றுமுறை....58
பர்யங்காஸனம் ....65
கோவிலாழ்வார் திருக்காப்பு சேர்த்தல் ....67

# முகவுரை

இவ்வுலகில், “ஞானம் அனுட்டானம்” இவை நன்றாக உடையனான ஆசார்யனை அணுகி, நாம் பெறும் நற்பேறுகள் ஐந்து. “பஞ்ச சம்ஸ்காரம்” அல்லது “ஸமாச்ரயணம்” என்பர் இதனை.

“**தாப: புண்ட்ர ததாநாம, மந்த்ரோ, யாகச்ச பஞ்சம**” எனும் இதில்

தாப: தீயில் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்கரம் – சங்கு இலச்சினைகளை ஆசார்யன் நம் தோளில் பொறிப்பது.

புண்ட்ர: பகவானின் பன்னிரு திருநாமங்களை நெற்றி முதலான நம் உடலின் பன்னிரு இடங்களில் முறையே கூறி திருமண் காப்புகளை அணிவிப்பது.

நாம: பூர்வாசார்யர்கள் மற்றும் ஆழ்வார்கள் திருநாமங்களை இட்டு தாஸ்யநாம (அடிமைத்திருநாமப் பெயர்) சூட்டுவது.

மந்த்ர: ரஹஸ்ய த்ரயமான திருமந்திரம், த்வயம், சரம ஸ்லோகங்களை ஆசார்ய உபதேசமாகப் பெறுவது.

யாக: யாகம் – வேள்வி, திருவாராதனம். பகவானுக்கு நாம் செய்யும் கைங்கர்யம். பக்தியுடன் நாம் செய்யும் ஆராதனமே இவ்வைந்து சடங்கிலும் மிக முக்கியம். பகவதாராதனம் செய்த பிறகே உணவருந்த வேண்டும். ஆகையால் ஸ்ரீவைஷ்ணவனுக்கு இன்றியமையாதது திருவாராதனம்.

தினந்தோறும் விடியற்காலையில் எழுந்திருந்து சிரஸ்நானம் செய்ய வேண்டும். கிழக்கு முகமாக அமர்ந்து கொண்டு திருமண் காப்பு அணிந்து கொள்ள வேண்டும். காலை ஸந்த்யாவந்தனமும், மாத்யாஹ்நிஹமும் செய்ய வேண்டும்.

பகவத் விக்ரஹம், சாளக்கிராமம், ஆழ்வார் ஆச்சாரியர்கள் படம், ஆச்சாரியன் திருவடி நிலைகள் ஆகியவற்றை வைத்துத் திருவாரதனம் செய்யலாம்.

# மந்த்ரஸ்நானம்

- எம்பெருமான் பள்ளி கொண்டுள்ள கோவிலாழ்வார் முன் செல்வதற்கு முன்பு இரண்டு முறை ஆசமனம் செய்து கீழ்கண்ட மந்திரத்தினால் ஸ்நானம் செய்து கொள்ளவும்.

புவி மூர்த்4நி ததாகாசே மூர்த்2நி ஆகாசே ததா புவி
ஆகாசே புவி மூர்த்4நி ஸ்யாத் ஆபோஹிஷ்டேதி மந்த்ரத:

கீழ்கண்ட மந்த்ரத்தின் ஒவ்வொரு வாக்கியத்தையும் சொல்லி விரல்களால் ஜலத்தை ப்ரோக்ஷித்துக் கொள்ளவேண்டும்.

| | |
|---|---|
| • ஓம் ஆபோஹிஷ்டா2 மயோ பு4வ: | கால் |
| • ஓம் தா ந ஊர்ஜே த3தா4தந | தலை |
| • ஓம் மஹேரணாய சக்ஷஸே | மார்பு |
| • ஓம் யோ வ: Sவதமோ ரஸ: | தலை |
| • ஓம் தஸ்ய பா4ஜயதேஹ ந: | மார்பு |
| • ஓம் உ Sதீரிவ மாதர: | கால் |
| • ஓம் தஸ்மா அரங்கமாமவ: | மார்பு |
| • ஓம் யஸ்ய க்ஷாய ஜிந்வத2 | முழங்கால்கள் |
| • ஓம் ஆபோஜநயதா2 ச ந: | தலை |

ஜலத்தால் தன்னை சுற்றிக் கொள்ளவும்

- ஓம் பூ4ர்பூவஸ் ஸுவ:

# திருத்துழாய் எழுந்தருளச் செய்தல்

**திருத்துழாய் (துளஸி) பறிக்கும் பொழுது ஸேவிக்க வேண்டிய மந்த்ரம்**

துளஸ்யம்ருத ஜ3ந்மாஸி ஸதா3த்வம் கேSவப்ரியே
கேSவார்த2ம் லுநாமி த்வாம் வரதா3 ப4வசோSப4நே
மோக்ஷைகஹேதோ: த4ரணிப்ரஸூதே
விஷ்ணோஸ்ஸமஸ்தஸ்ய ஜகத்ப்ரஸூதே:
ஆராத3நார்த2ம் புருஷோத்தமஸ்ய லுநாமி பத்ரம் துளஸி! க்ஷமஸ்வ

**திருத்துழாய் பறிக்கும் விதம்**

- துளஸி செடியிடம் சென்று, தெண்டம் சமர்பிவித்து, கையை மூன்று ஆவர்த்தி தட்டி, மேலே கூறிய மந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு, வலது கை கட்டை விரலையும் பவித்ர விரலையும் சேர்த்து, நகம் படாமல், அவை வழியாக துளஸியை நான்கு இலைகளுடன் ஒரு இலை உள்ள கொத்தாக ஒவ்வொன்றாகச் சேர்க்கவும்.

**திருத்துழாய் பறிக்கக் கூடாத சமயங்கள்**

- ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, மத்தியானம், ஸாயங்காலம், புதுவருஷப்பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி, சங்கராந்தி, த்வாதசி, மற்றும் பித்ரு திதி நாட்கள்.

# குருபரம்பரை தியானம்

- கோவிலாழ்வார் வலது புறத்தில் நின்று கொண்டு ஆசாரியன் திருவடிகளை தியானித்துக்கொண்டு அநுஸந்திக்கவும்.

**வாக்ய குரும்பரை**

அஸ்மத் கு3ருப்4யோ நம:
அஸ்மத் பரமகு3ருப்4யோ நம:
அஸ்மத் ஸர்வகு3ருப்4யோ நம:
ஸ்ரீமத் வரவர முனயே நம:
ஸ்ரீமதே ராமனுஜாய நம:
ஸ்ரீபராங்குS தா3ஸாய நம:
ஸ்ரீமத் யாமுநமுனயே நம:
ஸ்ரீராம மிச்ராய நம:
ஸ்ரீபுண்ட3ரிகாக்ஷாய நம:
ஸ்ரீமந் நாத2முனயே நம:
ஸ்ரீமதே ஸட2கோபாய நம:
ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாய நம:
ஸ்ரீயை நம:
ஸ்ரீத4ராய நம:

**ஸ்லோக குருபரம்பரை (கூரத்தாழ்வான் அருளிச்செய்தது)**

அஸ்மத்3 தேSகமஸ்மதீ3ய பரமாசார்யாந் அசேஷாந் குருந்
ஸ்ரீமந் லக்ஷ்மண யோகி3 புங்க3வ மஹாபூர்ணௌ முநிம் யாமுநம்
ராமம் பத்3ம விலோசநம் முநிவரம் நாத2ம் Sட2த்3வேஷிணம்
ஸேநேSம் Sரியம் இந்தி3ராஸஹசரம் நாராயணம் ஸம்Sரயே

**திருமந்திரம் (அஷ்டாக்ஷர மந்த்ரம்)**

ஓம் நமோ நாராயணாய

**த்3வய மந்திரம்**

ஸ்ரீமந் நாராயண சரணௌ Sரணம் ப்ரபத்3யே ஸ்ரீமதே நாராயணாய நம:

**ஸ்ரீக்ருஷ்ண சரம ஸ்லோகம்**

ஸர்வ த4ர்மாந் பரித்யஜ்ய மாமேகம் Sரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்4யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:

**வராஹ சரம ஸ்லோகம்**

ஸ்திதேமநஸி ஸுஸ்வஸ்தே சரீரே ஸதி யோ நர:
தாது ஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விஸ்வரூபம்ஸ்ச மாமஜம்
ததஸ்தம் ம்ரியமாணாம்து காஷ்டபாஷாண ஸ்ந்நிபம்
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்

**ஸ்ரீராம சரம ஸ்லோகம்**

ஸக்ருதே3வ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே
அப4யம் ஸர்வ பூ4தேப்4யோ த3தா3ம்யேதத்3 வ்ரதம் மம

**பெரிய பெருமாள் தனியன்**

ஸ்ரீ ஸ்தநாபரணம் தேஜ: ஸ்ரீரங்கேஸமாஸ்ரயே
சிந்தாமணி மிவோத்வாந்த முத்ஸங்கே அநந்த போகிந:

**பெரிய பிராட்டியார் தனியன்**

நம: ஸ்ரீரங்கநாயக்யை யத்ப்ரூ விப்ரம பேதத:
ஈ§S Sதவ்ய வைஷம்ய நிம்நோந்நதம் இதம் ஜகத்

- தங்களுடைய ஆசாரியன், பரமாசாரியன் தனியன்களை இங்கே அனுசந்திக்கவும்.

**மணவாள மாமுனிகள் தனியன் (அழகிய மணவாளன் அருளிச்செய்தது)**

ஸ்ரீசைலேச த3யாபாத்ரம் தீ4ப4க்த்யாதி3 கு3ணார்ணவம்
யதீந்த்3ர ப்ரவணம் வந்தே3 ரம்யஜாமாதரம் முநிம்

**குரு பரம்பரை தனியன் (கூரத்தாழ்வான் அருளிச்செய்தது)**

லக்ஷ்மீ நாத2 ஸமாரம்பா4ம் நாத2யாமுந மத்4யமாம்
அஸ்மதா3சார்ய பர்யந்தாம் வந்தே3 கு3ரு பரம்பராம்

**எம்பெருமானார் தனியன் (கூரத்தாழ்வான் அருளிச்செய்தது)**

யோ நித்யம் அச்யுத பதா3ம்பு3ஜ யுக்3மருக்ம
        வ்யாமோஹதஸ் ததி3தராணி த்ருணாய மேநே
அஸ்மத்3 கு3ரோர் ப4கவதோSSஸ்ய த3யைகஸிந்தோ4:
        ராமாநுஜஸ்ய சரணௌ S ரணம் ப்ரபத்3யே

**நம்மாழ்வார் தனியன் (ஆளவந்தார் அருளிச்செய்தது)**

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூ4தி:
        ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம்
ஆத்3யஸ்ய ந: குலபதேர் வகுளாபி4ராமம்
        ஶ்ரீமத் தத3ங்க்4ரி யுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா

**ஆழ்வார்கள் உடையவர் தனியன் (ஶ்ரீபராசர பட்டர் அருளிச்செய்தது)**

பூ4தம் ஸரஸ்ச மஹதா3ஹ்வய ப4ட்ட நாத2
        ஶ்ரீப4க்திஸார குலசேக2ர யோகி3வாஹாந்
ப4க்தாங்க்4ரிரேணு பரகால யதீந்த்3ரமி S ஶ்ராந்
        ஶ்ரீமத் பராங்கு S முநிம் ப்ரணதோSSஸ்மி நித்யம்

# கோவிலாழ்வார் திருக்காப்பு நீக்குதல்

- அடியேன் இராமானுஜ தாஸன் (ஆசாரியன் வழங்கிய தாஸ்ய நாமம்) என்று தெண்டன் ஸமர்ப்பிக்கவும்.

**ஸுப்ரபாதம்**

கௌஸல்யா ஸுப்ரஜா ராம! பூர்வா ஸந்த்4யா ப்ரவர்த்ததே
உத்திஷ்ட2 நர S ¡ர்தூ3ல! கர்தவ்யம் தை3வமாஹ்நிகம்
வீர! ஸௌம்ய! விபு3த்4யஸ்வ கௌஸல்யாநந்த3வர்த4ந!
ஜக3த்4தி3 ஸர்வம் ஸ்வபிதி த்வயி ஸுப்தே நராதி4ப!
யாமிந்யபைதி யது3நாத4! விமுஞ்ச நித்3ராம்
உந்மேஷம் ருச்ச2தி தவோந் மிஷிதேந வி S[illegible]ம்
ஜாதஸ்வயம் க2லு ஜக3த்4தி3தமேவ கர்தும்
த4ர்ம ப்ரவர்தநதி4யா த4ரணீதலேऽஸ்மிந்
ஸுகா2ய ஸுப்ராதரித3ம் தவாஸ்து ஜகத்பதே! ஜாக்3ருஹி நந்த3ஸூநோ!
அம்போ4ஜமந்த S[illegible]ய மஞ்ஜுதார லோலம்ப3 உந்மீலது லோசநம் தே
உத்திஷ்டோ2த்திஷ்ட2 கோ3விந்த3! உத்திஷ்ட2 க3ருடத்4வஜ
உத்திஷ்ட2 கமலாகாந்த! த்ரைலோக்யம் மங்க3ளம் குரு

**திருப்பாவை**

** நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே! * கொடித் தோன்றும் தோரண
வாயில் காப்பானே! * மணிக் கதவம் தாள் திறவாய் *
ஆயர் சிறுமியரோமுக்கு ** அறை பறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான் *
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான் *
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா! * நீ
நேய நிலைக் கதவம் நீக்கேலோர் எம்பாவாய்* 15

- “ஓம் ஸஹஸ்ரோல்காய ஸ்வாஹா வீர்யாய அஸ்த்ராய ப2ட்” என்று சொல்லி மூன்று தரம் கையைத் தட்டி திருக்காப்பை நீக்கவும்.

# எம்பெருமான் திருப்பள்ளி உணர்த்துதல்

- எம்பெருமான் எழுந்தருளியுள்ள ஆதிசேஷன் (பெருமாள் பெட்டி) திருக்காப்பு நீக்கவும்.
- எம்பெருமான் திருமுகமண்டலத்தை ஸேவித்துக் கொண்டு திருப்பள்ளி உணர்த்தி திவ்ய ஸிம்ஹாஸநத்திற்கு எழுந்தருள வேணும் என்று ப்ரார்த்திக்கவும்.

**பல்லாண்டு**

** பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு *
பலகோடி நூறாயிரம் *
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! *
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ** 1

** அடியோமோடும் நின்னோடும் * பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு *
வடிவாய் நின் வல மார்பினில் * வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு *
வடிவார் சோதி வலத்துறையும் * சுடராழியும் பல்லாண்டு *
படைபோர் புக்கு முழங்கும் * அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ** 2

**திருப்பாவை**

மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் *
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து *
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி *
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப் **
போதருமா போலே நீ பூவைப் பூ வண்ணா * உன்
கோயில் நின்று இங்கனே போந்தருளி * கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து * யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய் ** 16

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடி போற்றி *

சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல் போற்றி *
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி *
கன்று குணிலா எறிந்தாய் ! கழல் போற்றி *
குன்று குடையாய் எடுத்தாய் ! குணம் போற்றி *
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி *
என்றென்று உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான் *
இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய் ** 24

சிற்றஞ் சிறு காலே வந்துன்னைச் சேவித்து * உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய் *
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து * நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது **
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா! *
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் * உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம் *
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய் ** 29

**ஜிதந்தே ஸ்தோத்ரம்**

ஜிதந்தே புண்ட3ரீகாக்ஷ நமஸ்தே விஸ்வபா4வந
நமஸ்தேऽஸ்து ஹ்ருஷீகேஶ மஹாபுருஷ பூர்வஜ 1
தே3வாநாம் தா3நவாநாம் ச ஸாமாந்ய மதி4தைவதம்
ஸர்வதா3 சரணத்3 வந்த்3வம் வ்ரஜாமி ஶரணம் தவ 2

**ஸ்தோத்ர ரத்னம்**

நமோ நமோ வாங்மநஸாதி பூ4மயே
நமோ நமோ வாங்மநஸைக பூ4மயே
நமோ நமோऽநந்த மஹா விபூ4தயே
நமோ நமோऽநந்த த3யைக ஸிந்த4வே 21
ந த4ர்ம நிஷ்டோ2ஸ்மி நசாத்மவேதீ3
ந ப4க்திமாந் த்வச்சரணாரவிந்தே3
அகிஞ்சநோऽநந்ய க3தி ஶஶரண்ய!

தவத்பாத3மூலம் Sரணம் ப்ரபத்3யே 22
அபராத4 ஸஹஸ்ர பா4ஜநம்
பதிதம் பீ4மபவ4வார்ண வோத3ரே
அக3திம் Sரணாக3தம் ஹரே
க்ருப்யா கேவலம் ஆத்மஸாத் குரு 48

- ஸாளக்ராம எம்பெருமான்களுக்கு திருவாலவட்ட (விசிறி) ஸமர்ப்பிக்கவும்.
- எம்பெருமான்களை பெட்டியிலிருந்து வெளியே எழுந்தருளப்பண்ணவும்.
- கீழ்க்கண்ட ஸ்லோகங்களை அனுஸந்தித்துக் கொண்டு, பெருமாளுடைய திருப்படுக்கையை உதறி, உள்ளே உள்ள பழைய புஷ்பங்களை களையவும்.
- மறுபடியும் எம்பெருமான்களை பெட்டிக்குள் எழுந்தருளப் பண்ணவும்.

## ஸ்ரீவைகுண்ட த்யானம்

கூர்மாதீ3ந் தி3வ்யலோகம் தத3நு மணிமயம் மண்ட3பம் தத்ர§Sஷம்
தஸ்மிந் த4ர்மாதி3பீட2ம் த3து3பரிகமலம் சாமரக்3ராஹிணீSஓ
விஷ்ணும் தே3வீவிபூ4ஷாயுத4க3ணமுரக3ம் பாது3கே வைநதேயம்
ஸேநேSம் த்3வாரபாலாந் குமுத3முக2க3ணாந் விஷ்ணுப4க்தாந் ப்ரபத்3யே

## திருமந்திர த்யான ஸ்லோகம்

ஸவ்யம் பாத3ம் ப்ரஸார்ய ச்ரித து3ரிதஹரம் த3க்ஷிணம் குஞ்ஜயித்வா
ஜாநுந்யாதா4ய ஸவ்யேதர மிதரபு4ஜம் நாக3போ4கே3 நிதா4யே
பச்சா2த்3 பா3ஹுத்3வயேன ப்ரதிப4ட ஷமநே தா4ரயந் Sங்கசக்ரே
தே3வீ பூ4ஷாதி3 ஜுஷ்டோ ஜநயது ஜக3தாம் சர்ம வைகுண்ட2 நாத2:

- நைச்யாநு ஸந்தானத்துடன் அகிஞ்சந அநந்ய கதித்வ ஸ்வரூபத்தை முன்னிட்டுக் கொண்டு, ஆசாரியமுகமாய் சரணாகதி அனுசரிக்கவும்.

## ஸ்ரீ Sரணாக3தி க3த்3யம்


பக4வந் நாராயணாபி4மதாநுரூப * ஸ்வரூப ரூப கு3ணவிப4வ ஐSவர்ய * Sீலாத்3ய அநவதி4காதிSய * அஸங்க்2யேய கல்யாண கு3ணக3ணாம் * பத்3மவநாலயாம் * ப4க3வதீம் * Sரியம் * தே3வீம் * நித்யாநபாயினீம் * நிரவத்3யாம் * தே3வதே3வ தி3வ்ய மஹிஷீம் * அகி2ல ஜக3ந் மாதரம் * அஸ்மந் மாதரம் * அSரண்ய Sரண்யாம் * அநந்ய Sரண: Sரணம் அஹம் ப்ரபத்3யே *

- "ஸ்ரீமதே நாராயணாய நம: ஸ்ரீம் ச்ரியை நம: பூ4ம் பூ4ம்யை நம: நீம் நீளாயை நம: ஸமஸ்த பரிவாராய ஸர்வ மங்கள விக்3ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம: " என்று சொல்லி கோயில் திருமலை பெருமாள் கோவில் முதலான நூற்றெட்டுத் திருப்பதி எம்பெருமான்களும் நித்யஸூரிகளோடு கூட ஸாந்நித்தியம் பண்ணி அருள வேண்டும், ஆசாரியன் திருக்கைகளால் பூரண திருவாராதனம் கண்டு அருள வேண்டும் என்று பிரார்த்தித்து திருத்துழாயை எம்பெருமான் திருவடிகளில் சமர்பிக்கவும்.

# பாத்திர பரிகல்பநம்

**பாத்திரங்களை அமைக்கும் முறை**

- பெருமாள் எழுந்தருளியிருக்கும் திக்கை கிழக்கு முகமாக பாவிக்கவும்.



1. அர்க்4ய வட்டில்
2. பாத்4ய வட்டில்
3. ஆசமன வட்டில்
4. ஸ்நாநீய (பாநீய) வட்டில்
5. சுத்4தோ3த3க வட்டில்
6. படிகம்
7. திருமஞ்சனத்தாழி

- **ஆக்னேய** (தென் கிழக்கு) மூலையில் அர்க்4ய வட்டிலையும் (திருக்கை விளக்குவதற்காக)
- **நிருருதி** (தென் மேற்கு) மூலையில் பாத்4ய வட்டிலையும் (திருவடி விளக்குவதற்காக)
- **வாயு** (வட மேற்கு) மூலையில் ஆசமனீய வட்டிலையும் (திருப்பவளம் சோதிப்பதற்காக)
- **ஈசான்ய** (வட கிழக்கு) மூலையில் ஸ்நாந, பாநீய வட்டில்களையும்
- **நடு** (மத்தியில்) சுத்4தோ3த3க வட்டிலையும் வைக்கவும்.

**பாத்திரங்கள ஸித்திப்படுத்துதல்**

- கோவிலாழ்வார் வலது புறத்தில் திருமஞ்சனத்தாழியில் தீர்த்தம் நிறைத்து அதில் சாற்றுப்படி (சந்தனம்), ஏலக்காய், குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் முதலான பரிமள த்ரவியங்களைப் பறிமாறவும்.

- திருத்துழாய்தளத்தை ஆட்காட்டி விரல், நடு விரல் இரண்டுக்கும் நடுவில் இடுக்கிக் கொண்டு, திருக்காவேரியை ஸ்பர்சித்துக் கொண்டு, "ஸ்ரீமந்நாராயண சரணௌ Sரணம் ப்ரபத்3யே ஸ்ரீமதே நாராயணாய நம:" என்கிற வாக்கியத்தால் ஐந்து முறை ஆவர்த்திக்கவும்.
- ஒரு உத்தரணி தீர்த்தம் திருக்காவேரியிலிருந்து எடுத்து வட்டில்களையும், படிகம், இடம் எல்லாவற்றையும் "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று சொல்லி சோதிக்கவும்.
- அர்க்4ய, பாத்4ய, ஆசமனீய, ஸ்நாநீய, சுத்4தோ3த3க வட்டில்களில் திருக்காவேரியில் உள்ள தீர்த்தத்தைச் சேர்த்து திருத்துழாய் பரிமாறவும்.
- திருத்துழாய்தளத்தை ஆட்காட்டி விரல் நடு விரல் இரண்டுக்கும் நடுவில் இடுக்கிக் கொண்டு அர்க்4ய, பாத்4ய, ஆசமனீய, ஸ்நாநீய, சுத்4தோ3த3க வட்டில்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே ஸ்பர்சித்து "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று ஐந்து முறை அனுஸந்திக்கவும்.
- பாத்4ய, ஆசமனீய, ஸ்நாநீய, சுத்4தோ3த3க வட்டில்கள் ஒவ்வொன்றில் இருந்தும் ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து அர்க்4ய வட்டிலில் சேர்க்கவும்.
- அர்க்4ய வட்டிலில் இருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து இடது கையில் வைத்துக் கொண்டு, வலது கையில் திருத்துழாயை இடுக்கிக் கொண்டு, வலது கையால் மூடிக்கொண்டு, நெற்றி வரையில் தூக்கிப் பிடித்து, "ஸ்ரீமதே நாராயணாய நம: ஸ்ரீம் ச்ரியை நம: பூ4ம் பூ4ம்யை நம: நீம் நீளாயை நம: ஸமஸ்த பரிவாராய ஸர்வ மங்கள விக்3ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம: விரஜா தீர்த்தமாகவாதல் திருக்காவேரி தீர்த்தமாகவாதல் திருவுள்ளம் பற்றி அருள வேணும்" என்று விண்ணப்பிக்கவும்.
- உத்தரணியில் உள்ள தீர்த்தத்தை திருமஞ்சனத் தாழியிலும், ஐந்து வட்டில்களிலும் துளித்துளி சேர்த்து மீதமுள்ள தீர்த்தத்தாலே ஸ்ந்நிதியையும், தன்னையும் ப்ரோக்ஷித்துக் கொள்ளவும்.

# மானஸீக ஆராதனம்

## ஆசாரியனுக்கு ஆராதனம்

- "அஸ்மத் கு3ருப்4யோ நம: மானஸீக ஆராதனம் கண்டருள வேணும்" என்று விண்ணப்பித்து ஆசார்யன் திருவடிகளில் திருத்துழாய் கொழுந்தை ஸமர்ப்பிக்கவும்.
    - அஸ்மத் கு3ருப்4யோ நம: மந்த்ராஸனம் கண்டருள வேணும்.
    - அஸ்மத் கு3ருப்4யோ நம: ஸ்நாநாஸனம் கண்டருள வேணும்.
    - அஸ்மத் கு3ருப்4யோ நம: அலங்காராஸனம் கண்டருள வேணும்.
    - அஸ்மத் கு3ருப்4யோ நம: போஜ்யாஸனம் கண்டருள வேணும்.
    - அஸ்மத் கு3ருப்4யோ நம: புநர்மந்த்ராஸனம் கண்டருள வேணும்.

## எம்பெருமானாருக்கு ஆராதனம்

- "ஸ்ரீமதே ராமாநுஜாய நம: மானஸீக ஆராதனம் கண்டருள வேணும்" என்று விண்ணப்பிக்கவும்.
- ஸ்ரீமதே ராமாநுஜாய நம: மந்த்ராஸனம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: அர்க்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: பாத்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஆசமனீயம் கண்டருள வேணும்
- ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்நாநாஸநம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: அர்க்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: பாத்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஆசமனீயம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: திருமஞ்சனம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: திருவொற்றாடை கண்டருள வேணும்
- ஸ்ரீமதே ராமாநுஜாய நம: அலங்காராஸனம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: அர்க்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: பாத்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஆசமனீயம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: திருவொற்றாடை கண்டருள வேணும்

    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: யஜ்ஞோபவீதம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: திருமண் காப்பு கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: சாற்றுப்படி கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: புஷ்பம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: திருதுழாய் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: தூபம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: தீபம் கண்டருள வேணும்
- ஸ்ரீமதே ராமாநுஜாய நம: போஜ்யாஸனம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: அர்க்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: பாத்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஆசமனீயம் கண்டருள வேணும்
- ஸ்ரீமதே ராமாநுஜாய நம: புநர்மந்த்ராஸனம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: அர்க்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: பாத்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஆசமனீயம் கண்டருள வேணும்

## ஆழ்வாராதிகளுக்கு ஆராதனம்

- "ஸ்ரீமத்3ப்4ய: பராங்குச பரகாலாதி3ப்4யோ நம: மானஸீக ஆராதனம் கண்டருள வேணும்" என்று விண்ணப்பித்து ஆழ்வார்கள் திருவடிகளில் திருத்துழாய் கொழுந்தை ஸமர்ப்பித்து, மானஸீகமாக மந்த்ராஸனம் முதல் போஜ்யாஸனம் வரையில் உள்ள உபசாரங்களை சமர்ப்பிக்கவும்.

## நித்யஸூரிகளுக்கு ஆராதனம்

- "ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாய நம: அநந்தாய நாக3ராஜாய நம: வைநதே4யாய பக்ஷிராஜாய நம: ஸுத3ர்சநாய ஹேதிராஜாய நம: பாஞ்சஜந்யாய Sங்கா2திபதயே நம: மானஸீக ஆராதனம் கண்டருள வேணும்" என்று விண்ணப்பித்து நித்யஸூரிகள் திருவடிகளில் திருத்துழாய் கொழுந்தை ஸமர்ப்பித்து, மானஸீகமாக மந்த்ராஸனம் முதல் போஜ்யாஸனம் வரையில் உள்ள உபசாரங்களை சமர்ப்பிக்கவும்.

## எம்பெருமானுக்கு ஆராதனம்

- "ஸ்ரீமதே நாராயணாய நம: ஸ்ரீம் ச்ரியை நம: பூ4ம் பூ4ம்யை நம: நீம் நீளாயை நம: ஸமஸ்தபரிவாராய ஸர்வ மங்களவிக்3ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம: மானஸீக ஆராதனம் கண்டருள வேணும்" என்று விண்ணப்பிக்கவும்.
- ஸ்ரீமதே நாராயணாய நம: மந்த்ராஸனம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: அர்க்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: பாத்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசமனீயம் கண்டருள வேணும்
- ஸ்ரீமதே நாராயணாய நம: ஸ்நாநாஸனம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: அர்க்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: பாத்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசமனீயம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: திருமஞ்சனம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: திருவொற்றாடை கண்டருள வேணும்
- ஸ்ரீமதே நாராயணாய நம: அலங்காராஸனம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: அர்க்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: பாத்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசமனீயம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: திருவொற்றாடை கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: யஜ்ஞோபவீதம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: திருமண் காப்பு கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: சாற்றுப்படி கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: புஷ்பம் கண்டருள வேணும்
    - ஸ்ரீதே நாராயணாய நம: திருதுழாய் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: தூபம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: தீபம் கண்டருள வேணும்
- ஸ்ரீமதே நாராயணாய நம: போஜ்யாஸனம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: அர்க்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: பாத்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசமனீயம் கண்டருள வேணும்

- ஸ்ரீமதே நாராயணாய நம: புநர்மந்த்ராஸனம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: அர்க்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: பாத்4யம் கண்டருள வேணும்
    - ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசமனீயம் கண்டருள வேணும்

**ஸாத்வீக த்யாகம்**

ஸ்வகீயேந ஆத்மநா கர்த்த்ரா ஸ்வகீயை S® உபகரணை:
ஸ்வாராத4நைக ப்ரயோஜநாய பரமபுருஷ: ஸர்வ§Sஷி ஸர்வ§Sஷ்வர:
S®ய: பதி: ஸ்வ§Sஷ பூ4தமித3ம் இஜ்யாக்2ய ப4க3வதா3ராத4நாக்2யம் கர்ம
ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே ஸ்வயமேவ காரயதி

- "அகிஞ்சனனான அடியேனை எம்பெருமான் திருவாராதனத்தில் நியமித்து அருள வேணும்" என்று ஆசாரியனைப் ப்ரார்த்திக்கவும்.
- ஆசாரியன் நியமித்ததாக நினைத்து, "அகிஞ்சனனான அடியேனை ஆசாரியன் எம்பெருமான் திருவாராதனத்தில் நியமித்து அருளினான். ஆசாரியன் திருக்கைகளால் பூர்ண திருவாராதனம் கண்டு அருள வேணும்" என்று  திருத்துழாய் சமர்ப்பிக்கவும்.

# மந்த்ராஸனம்

- "ஶ்ரீமதே நாராயணாய நம: ஶ்ரீம் ச்ரியை நம: பூ4ம் பூ4ம்யை நம: நீம் நீளாயை நம: ஸமஸ்தபரிவாராய ஸர்வ மங்களவிக்3ரஹாய ஶ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் மந்த்ராஸனம் கண்டருள வேணும்" என்று ப்ரார்த்தித்து எம்பெருமான் திருவடிகளில் திருத்துழாய் சமர்ப்பிக்கவும்.
- அர்க்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்3த4ரணி தீர்த்தம் எடுத்து "ஶ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் அர்க்4யம் கண்டருள வேணும்" என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- சுத்4தோ3த3க  பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து படிகத்தில் சேர்த்து உத்தரணியை சோதிக்கவும்.
- இரண்டு தடவை பாத்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து "ஶ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் பாத்4யம் கண்டருள வேணும்" என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- சுத்4தோ3த3க  பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து படிகத்தில் சேர்த்து உத்தரணியை சோதிக்கவும்.
- மூன்று தடவை ஆசமனீய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து "ஶ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் ஆசமநீயம் கண்டருள வேணும்" என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- தனி வஸ்திரத்தின் (ஒரு பட்டு வஸ்திரம்) ஒரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால்  எம்பெருமானுடைய திருப்பவளத்தையும், திருக்கைகளையும் சோதித்து, மற்றொரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால் எம்பெருமானுடைய திருவடிகளை சோதித்து, வஸ்திரத்தை கண்களில் ஒற்றிக்கொள்ளவும்.
- "ஶ்ரீமதே நாராயணாய நம: ஸமஸ்தபரிவாராய ஸர்வ மங்களவிக்3ரஹாய ஶ்ரீமதே நாராயணாய நம:" என்று சொல்லி மந்த்ராஸனத்தைப் பூர்த்தி செய்யவும்.

# ஸ்நானாஸனம்

- "ஸ்ரீமதே நாராயணாய நம: ஸ்ரீம் ச்ரியை நம: பூ4ம் பூ4ம்யை நம: நீம் நீளாயை நம: ஸமஸ்தபரிவாராய ஸர்வ மங்களவிக்3ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் ஸ்நானாஸனம் கண்டருள வேணும்" என்று ப்ரார்த்தித்து எம்பெருமான் திருவடிகளில் திருத்துழாய் சமர்ப்பிக்கவும்.
- அர்க்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து "ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் அர்க்4யம் கண்டருள வேணும்" என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- சுத்4தோ3த3க பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து படிகத்தில் சேர்த்து உத்தரணியை சோதிக்கவும்.
- இரண்டு தடவை பாத்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து "ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் பாத்4யம் கண்டருள வேணும்" என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- சுத்4தோ3த3க பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து படிகத்தில் சேர்த்து உத்தரணியை சோதிக்கவும்.
- மூன்று தடவை ஆசமனீய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து "ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் ஆசமனீயம் கண்டருள வேணும்" என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- தனி வஸ்திரத்தின் (ஒரு பட்டு வஸ்திரம்) ஒரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால் எம்பெருமானுடைய திருப்பவளத்தையும், திருக்கைகளையும் சோதித்து, மற்றொரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால் எம்பெருமானுடைய திருவடிகளை சோதித்து, வஸ்திரத்தை கண்களில் ஒற்றிக்கொள்ளவும்.
- சாளக்ராம எம்பெருமான்களை திருமஞ்சன வேதியில் எழுந்தருளப்பண்ணவும்.
- அர்க்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து இடது கையில் வைத்துக் கொண்டு, வலது கையில் ஒரு திருத்துழாய் தளத்தை எடுத்து

உத்தரணி தீர்த்தத்தில் தோய்த்து “ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் திருமுத்து விளக்க வேணும்” என்று சமர்ப்பித்து திருத்துழாயையும், தீர்த்தத்தையும் படிகத்தில் சேர்க்கவும்.

- சுத்4தோ3த3க  பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து படிகத்தில் சேர்த்து உத்தரணியை சோதிக்கவும்.
- அர்க்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து இடது கையில் வைத்துக் கொண்டு, வலது கையில் ஒரு திருத்துழாய் தளத்தை எடுத்து உத்தரணி தீர்த்தத்தில் தோய்த்து “ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் திருநாவழித்து அருள வேணும்” என்று சமர்ப்பித்து திருத்துழாயையும், தீர்த்தத்தையும் படிகத்தில் சேர்க்கவும்.
- அர்க்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து “ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் அர்க்4யம் கண்டருள வேணும்” என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- பாத்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து “ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் பாத்4யம் கண்டருள வேணும்” என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- ஆசமனீய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து “ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் ஆசமனீயம் கண்டருள வேணும்” என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- தனி வஸ்திரத்தின் (ஒரு பட்டு வஸ்திரம்) ஒரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால்  எம்பெருமானுடைய திருப்பவளத்தையும், திருக்கைகளையும் சோதித்து, மற்றொரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால் எம்பெருமானுடைய திருவடிகளை சோதித்து, வஸ்திரத்தை கண்களில் ஒற்றிக்கொள்ளவும்.
- ஸ்நாந பாத்திரத்திலிருந்து உத்தரணியால் தீர்த்தம் எடுத்து, வேதவாக்யங்களை அநுஸந்தித்துக் கொண்டே ஆசாரியன் திருக்கைகளால் எம்பெருமானுக்கு திருமஞ்சனம் செய்யவும்.

# ॥புருஷஸூக்தம் ॥

|| ஹரி: ஓம் ||

ஸஹஸ்ர Sீர்ஷா புருஷ: | ஸஹஸ்ரா க்ஷ: ஸஹஸ்ரபாத் |

ஸ பூ4மிம் வி Sஶ்தோ வ்ருத்வா | அத்ய திஷ்ட2த்3 த3 S¡ங்கு3லம் | 1

புருஷ ஏவேத3கும் ஸர்வம் | யத்3பூ4தம் யச்ச ப4வ்யம் |

உதாம்ருதத்வஸ்யே S¡ந: | யத3ந்நேநாதிரோஹதி | 2

ஏதாவாநஸ்ய மஹிமா | அதோ ஜ்யாயாகும் Sஶ்பூருஷ: |

பாதோ3ऽஸ்ய வி Sஶ்வா பூ4தாநி | த்ரிபாத3ஸ் யாம்ருதம் தி3வி | 3

த்ரிபாதூ3ர்த்4வ உதைத்3 புருஷ: | பாதோ3ऽஸ்யேஹா ப4வாத்புந: |

ததோ விஷ்வங் வ்யக்ராமத் | ஸா S நாந S நே அபி4 | 4

தஸ்மாத்3 விராட3 ஜாயத | விராஜோ அதி4 பூருஷ: |

ஸ ஜாதோ அத்யரிச்யத | ப Sஶ்சாத்3 பூ4மிமதோ2 புர: | 5

யத்புருஷேண ஹவிஷா | தே3வா யஜ்ஞமதந்வத |

வஸந்தோ அஸ்யாஸீதா3ஜ்யம் | க்3ரீஷ்ம இத்4ம Sஶ ரத்3த4வி: | 6

ஸப்தாஸ்யாஸந்பரித4ய: | த்ரிஸ்ஸப்த ஸமித4: க்ருதா: |

தே3வா யத்3யஜ்ஞம் தந்வாநா: | அப3த்4நந்புருஷம் ப S¦ம் | 7

தம் யஜ்ஞம் ப3ர்ஹிஷி ப்ரௌக்ஷந் | புருஷம் ஜாதமக்3ரத: |

தேந தே3வா அயஜந்த | ஸாத்4யா ருஷய Sஶ்யே | 8

தஸ்மாத்3 யஜ்ஞாத் ஸர்வஹுத: | ஸம்ப்4ருதம் ப்ருஷதா3ஜ்யம் |

ப S §குு3ம்ஸ் தாகுு3ம் சக்ரே வாயவ்யாந் | ஆரண்யாந் க்3ராம்யா S ஒயே | 9

தஸ்மாத்3 யஜ்ஞாத்ஸர்வஹுுத: | ருச ஸ்ஸாமாநி ஜஜ்ஞிரே |

ச2ந்தா3கும்ஸி ஜஜ்ஞிரே தஸ்மாத் | யஜுுஸ் தஸ்மாத3 ஜாயத | 10

தஸ்மாத3 S ஒா அஜாயந்த | யே கே சோப4யாத3த: |

கா3வோ ஹ ஜஜ்ஞிரே தஸ்மாத்| தஸ்மாஜ்ஜாதா அஜாவய: | 11

யத்புருஷம் வ்யத3து4: | கதிதா4 வ்யகல்பயந் |

முக2ம் கிமஸ்ய கௌ பா3ஹூ | காவூரூ பாதா3வுச்யேதே | 12

ப்3ராஹ்மணோ஽ஸ்ய முக2மாஸீத் | பா3ஹூ ராஜந்ய: க்ருத: |

ஊரூ தத3ஸ்ய யத்3வை S ஒ: | பத்3ப்4யாகும் S §த்3ரோ அஜாயத | 13

சந்த்3ரமா மநஸோ ஜாத: | சக்ஷோஸ்ஸூர்யோ அஜாயத |

முகா2தி3ந்த்3ர S ஒசாக்3நி S ஒ| ப்ராணாத்3 வாயுரஜாயத | 14

நாப்4யா ஆஸீத3ந்தரிக்ஷம் | S ர்ஷ்ணோ த்3யௌ: ஸமவர்தத |

பத்3ப்4யாம் பூ4மிர் தி3 S : S ஒரோத்ராத் | ததா2 லோகாகும் அகல்பயந் | 15

வேதா3ஹமேதம் புருஷம் மஹாந்தம் | ஆதி3த்யவர்ணம் தமஸஸ்து பாரே |

ஸர்வாணி ரூபாணி விசித்ய தீ4ர: | நாமாநி க்ருத்வா஽பி4வத3ந் யதா3ஸ்தே | 16

தா4தா புரஸ்தாத்3 யமுதா3 ஜஹார | S க்ர: ப்ரவித்3வாந் ப்ரதி3 S S ஒதஸ்ர: |

தமேவம் வித்3வாநம்ருத இஹ ப4வதி | நாந்ய: பந்தா2 அயநாய வித்3யதே | 17

யஜ்ஞேந யஜ்ஞமயஜந்த தே3வா: | தாநி த4ர்மாணி ப்ரத2மாந்யாஸந் |

தே ஹ நாகம் மஹிமாநஸ்ஸசந்தே|யத்ர பூர்வே ஸாத்4யாஸ்ஸந்தி தே3வா: 18

அத்3ப்4யஸ் ஸம்பூ4த: ப்ருதி2வ்யை ரஸாச்ச | வி S ஞ கர்மண: ஸமவர்ததாதி4 |

தஸ்ய த்வஷ்டா வித3த4த்3 ரூபமேதி | தத்புருஷஸ்ய வி S ஞமா ஜாநமக்3ரே |19

வேதா3ஹமேதம் புருஷம் மஹாந்தம் | ஆதி3த்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத் |

தமேவம் வித்3வாநம்ருத இஹ ப4வதி | நாந்ய: பந்தா2 வித்3யதே<sup></sup>யநாய | 20

ப்ரஜாபதி S Qசரதி க3ர்பே4 அந்த: | அஜாயமாநோ ப3ஹுதா4 விஜாயதே |

தஸ்ய தீ4ரா: பரிஜாநந்தி யோநிம் | மரீசிநாம் பத3மிச்ச2ந்தி வேத4ஸ: | 21

யோ தே3வேப்ய ஆதபதி | யோ தே3வாநாம் புரோஹித: |

பூர்வோ யோ தே3வேப்4யோ ஜாத: | நமோ ருசாய ப்3ராஹ்மயே | 22

ருசம் ப்3ராஹ்மம் ஜநயந்த: | தே3வா அக்3ரே தத3ப்3ருவந் |

யஸ்த்வைவம் ப்3ராஹ்மணோ வித்3யாத் | தஸ்ய தே3வா அஸந்வ§ S 23

ஹ்ரீ S ஞ தே லக்ஷ்மீ S ஞ பத்ந்யௌ | அஹோராத்ரே பார் S ஞவே |

நக்ஷத்ராணி ரூபம் | அ S ஞிநௌ வ்யாத்தம் | 24

இஷ்டம் மநிஷாண | அமும் மநிஷாண | ஸர்வம் மநிஷாண |

- “ஆப்யாயஸ்வ ஸமேதுதே விஸ்வத: ஸோம வ்ருஷ்ணியம் பவா வாஜஸ்ய ஸங்கதே” என்று காய்ச்சாத பசும்பாலை எம்பெருமானுக்கு திருமஞ்சனம் செய்யவும்.

# ॥ நாராயணஸூக்தம் ॥

|| ஹரி: ஓம் ||

ஸஹஸ்ர Sீர்ஷம் தேவம் விSவாக்ஷம் விSவSம்புவம் |

விSவம் நாராயணம் தேவமக்ஷரம் பரமம் பதம் | 1

விSவத: பரமம் நித்யம் விSவம் நாராயணகும் ஹரிம் |

விSவமேவேதம் புருஷஸ்தத்விSவமுபஜீவதி | 2

பதிம் விSவஸ் யாத்மேSவரகும் S¡Sவதகும் Sிவமச்யுதம் |

நாராயணம் மஹாஜ்ஞேயம் விSவாத்மாநாம் பராயணம் | 3

நாராயணபரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: |

நாராயண பரோ ஜ்யோதிராத்மா நாராயண பர: | 4

யச்ச கிஞ்சிஜ் ஜகத்யஸ்மிந் த்ருSயதே Sரூயதேऽபி வா |

அந்தர்பஹிSச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: | 5

அநந்தமவ்யயம் கவிகும் ஸமுத்ரேந்தம் விSவSம்புவம் |

பத்ம கோS ப்ரதீகாSகும் ஹ்ருதயம் சாப்யதோமுகம் | 6

அதோ நிஷ்ட்யா விதஸ்த்யாம் து நாப்யா முபரி திஷ்டதி |

ஹ்ருதயம் தத் விஜாநீயாத் விSவஸ்யாய தநம் மஹத் | 7

ஸந்ததகும் ஸிராபிஸ்து லம்பத்யா கோS ஸந்நிபம் |

தஸ்யாந்தே ஸுஷிரகும் ஸூக்ஷ்மம் தஸ்மிந் ஸ்ர்வம் ப்ரதிஷ்டிதம் | 8

தஸ்ய மத்4யே மஹாநக்3நிர்வி S ஷ்வார்சிர் வி S ஷ்வதோமுக2: |

ஸோSக்3ரபு4க் விப4ஜந்திஷ்ட2ந் நாஹார மஜர: கவி: | 9

ஸந்தாபயதி ஸ்வம் தேஹ3மாபாத3 தலமஸ்தகம் |

தஸ்ய மத்4யே வஹ்நி Sகா2 அணீயோர்த்4வா வ்யவஸ்தி2த: | 10

நீலதோயத3 மத்4யஸ்தா2 வித்3யுல்லேகே2வ பா4ஸ்வரா |

நீவாரா S § கவத்தந்வீ பீதா பா4ஸ்யாத்தநூபமா | 11

தஸ்யா S QS கா2யா மத்4யே பரமாத்மா வ்யவஸ்தி2த: |

ஸ ப்3ரஹ்மா ஸ Sவஸ் ஸேந்த்3ரஸ்ஸோSக்ஷர: பரம: ஸ்வராட் || 12

ருதகும் ஸத்யம் பரம் ப்3ரஹ்ம புருஷம் க்ருஷ்ண பிங்க3ளம் |

ஊர்த்4வரேதம் விரூபாக்ஷம் வி S ஷ்வரூபாய வை நம: || 13

ஓம் நாராயணாய வித்3மஹே வாஸுதே3வாய தீ4மஹி |

தந்நோ விஷ்ணு: ப்ரசோத3யாத் || 14

## || விஷ்ணுஸூக்தம் ||

|| ஹரி: ஓம் ||

விஷ்ணோர்நுகம் வீர்யாணி ப்ரவோசம் ய: பார்தி2வாநி விமமே ரஜாகும்ஸி

யோ அஸ்கபா4ய துத்3த்தரகும் ஸத4ஸ்த2ம் விசக்ரமாணஸ்த்ரேதோ4ருகா3யோ

விஷ்ணோரராடமஸி விஷ்ணோ: ப்ருஷ்ட2மஸி விஷ்ணோ:

S ஞப்த்ரேஸ்தோ2 விஷ்ணோஸ்ஸ்யூரஸி விஷ்ணோர் த்4ருவமஸி

வைஷ்ணவமஸி விஷ்ணவே த்வா ||

- கீழ்கண்ட வேதவாக்யத்தை அநுஸந்தித்துக் கொண்டே சாற்றுப்படியால் திருமஞ்சனம் செய்யவேண்டும்.

| | ||
கஂ3ந்த4த்3வாராம் து3ராத4ர்ஷாம் நித்யபுஷ்டாம் கரீஷிணீம் |
| | |
ஈSவரீகும் ஸர்வபூ4தாநாம் தாமிஹோபஹ்வயே Sரியம் ||

- கீழ்கண்ட பாசுரங்களை அநுஸந்தித்துக் கொண்டே இளநீர், தயிர், தேன் ஆகியவற்றாலோ அல்லது தீர்தத்தாலோ திருமஞ்சனம் செய்யலாம்.

**பெரியாழ்வார் திருமொழி - கண்ணனை நீராட அழைத்தல்**

** வெண்ணெய் அளைந்த குணுங்கும் * விளையாடு புழுதியும் கொண்டு *
திண்ணென இவ்விரா உன்னைத் * தேய்த்துக் கிடக்க நான் ஒட்டேன் **
எண்ணெய் புளிப் பழம் கொண்டு * இங்கெத்தனை போதும் இருந்தேன் *
நண்ணல் அரிய பிரானே! * நாரணா! நீராட வாராய்! 2.4.1

கன்றுகள் ஓடச் செவியில் * கட்டெறும்பு பிடித்திட்டால் *
தென்றிக் கெடுமாகில் * வெண்ணெய் திரட்டி விழுங்குமா காண்பன் **
நின்ற மராமரம் சாய்த்தாய் * நீ பிறந்த திருவோணம் *
இன்று நீ நீராட வேண்டும் * எம்பிரான் ! ஓடாதே வாராய்! 2.4.2

பேய்ச்சி முலை உண்ணக் கண்டு * பின்னையும் நில்லாதென் நெஞ்சம் *
ஆய்ச்சியர் எல்லாரும் கூடி * அழைக்கவும் நான் முலை தந்தேன் **
காய்ச்சின நீரோடு நெல்லி * கடாரத்தில் பூரித்து வைத்தேன் *
வாய்த்த புகழ் மணிவண்ணா! * மஞ்சனமாட நீ வாராய்! 2.4.3

கஞ்சன் புணர்பினில் வந்த * கடிய சகடம் உதைத்து *
வஞ்சகப் பேய் மகள் துஞ்ச * வாய் முலை வைத்த பிரானே! **
மஞ்சளும் செங்கழுநீரின் * வாசிகையும் நாறு சாந்தும் *
அஞ்சனமும் கொண்டு வைத்தேன் * அழகனே! நீராட வாராய்! 2.4.4

அப்பம் கலந்த சிற்றுண்டி * அக்காரம் பாலில் கலந்து *
சொப்பிட நான் சுட்டு வைத்தேன் * தின்னல் உறுதியேல் நம்பீ! **
செப்பிள மென்முலையார்கள் * சிறு புறம் பேசிச் சிரிப்பர் *
சொப்பிட நீராட வேண்டும் * சோத்தம்பிரான் ! இங்கே வாராய்! 2.4.5

எண்ணெய்க் குடத்தை உருட்டி * இளம் பிள்ளை கிள்ளி எழுப்பி *
கண்ணைப் புரட்டி விழித்து * கழகண்டு செய்யும் பிரானே! **
உண்ணக் கனிகள் தருவன் * ஒலிகடல் ஓத நீர் போலே *
வண்ணம் அழகிய நம்பீ! * மஞ்சனமாட நீ வாராய்! 2.4.6

கறந்த நற்பாலும் தயிரும் * கடைந்துறி மேல் வைத்த வெண்ணெய் *
பிறந்ததுவே முதலாகப் * பெற்றறியேன் எம்பிரானே! **
சிறந்த நற்றாய் அலர் தூற்றும் * என்பதனால் பிறர் முன்னே *
மறந்தும் உரையாட மாட்டேன் * மஞ்சனமாட நீ வாராய் 2.4.7

கன்றினை வாலோலை கட்டிக் * கனிகள் உதிர எறிந்து *
பின் தொடர்ந்து ஓடி ஓர் பாம்பைப் * பிடித்துக் கொண்டாட்டினாய் போலும்**
நின் திறத்தேன் அல்லேன் நம்பீ! * நீ பிறந்த திரு நல்நாள் *
நன்று நீ நீராட வேண்டும் * நாரணா! ஓடாதே வாராய்! 2.4.8

பூனித் தொழுவினில் புக்குப் * புழுதி அளைந்த பொன் மேனி *
காணப் பெரிதும் உகப்பன் * ஆகிலும் கண்டார் பழிப்பர் **
நாண் எத்தனையும் இலாதாய்! * நப்பின்னை காணில் சிரிக்கும் *
மாணிக்கமே! என் மணியே! * மஞ்சனமாட நீ வாராய்! 2.4.9

** கார்மலி மேனி நிறத்துக் * கண்ண பிரானை உகந்து *
வார்மலி கொங்கை யசோதை * மஞ்சனமாட்டியவாற்றை **
பார்மலி தொல் புதுவைக் கோன் * பட்டர் பிரான் சொன்ன பாடல் *
சீர்மலி செந்தமிழ் வல்லார் * தீவினை யாதும் இலரே 2.4.10

### திருக்குறுந்தாண்டகம்

முன்பொலா இராவணன் தன் * முது மதிள் இலங்கை வேவித்து *
அன்பினால் அனுமன் வந்து * ஆங்கடியிணை பணிய நின்றார்க்கு **
என்பெலாம் உருகியுக்கிட்டு * என்னுடை நெஞ்சம் என்னும் *
அன்பினால் ஞான நீர் கொண்டு * ஆட்டுவன் அடியனேனே * 15

மாய மான் மாயச் செற்று * மருதிற நடந்து * வையம்
தாயமா பரவை பொங்கத் * தடவரை திரித்து ** வானோர்க்கு
ஈயுமால் எம்பிரானார்க்கு * என்னுடைச் சொற்கள் என்னும் *
தூயமா மாலை கொண்டு * சூட்டுவன் தொண்டனேனே 16

### திருவிருத்தம்

சூட்டு நன்மாலைகள் * தூயன ஏந்தி * விண்ணோர்கள் நன்னீர்
ஆட்டி * அந்தூபம் தரா நிற்கவே அங்கு ** ஓர் மாயையினால்
ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்திமிலேற்றுவன் கூன் *
கோட்டிடையானை கூத்து * அடலாயர் தம் கொம்பினுக்கே 21

### பெரியாழ்வார் திருமொழி

காடுகளூடு போய்க் * கன்றுகள் மேய்த்து மறியோடிக் * கார்க்கோடல்பூச்
சூடி வருகின்ற தாமோதரா! * கற்றுத் தூளி காண் உன் உடம்பு **
பேடை மயிற் சாயல் பின்னை மணாளா! * நீராட்டமைத்து வைத்தேன் *
ஆடி அமுது செய்யப்பனும் உண்டிலன் * உன்னோடுடனே உண்பான் 3.3.3

திண்ணார் வெண்சங்குடையாய்! *
திருநாள் திருவோணம் இன்றேழு நாள் * முன்
பண்ணேர் மொழியாரைக் கூவி முளையட்டிப் *
பல்லாண்டு கூறுவித்தேன் **
கண்ணாலம் செய்யக் * கறியும் கலத்தரிசியும் ஆக்கி வைத்தேன் *
கண்ணா! நீ நாளைத்தொட்டுக் கன்றின் பின்போகேல் *
கோலம் செய்திங்கே இரு 3.3.10

- கீழ்கண்ட வேதவாக்கியங்களை அநுஸந்தித்துக்கொண்டு உலர்ந்த வஸ்திரத்தால் எம்பெருமான்களை நன்றாகத் துடைத்து  சாற்றுப்படி சமர்ப்பித்து கோவிலாழ்வாரில் எழுந்தருளப் பண்ணவும்.

# ||ஶ்ரீஸூக்தம் ||

|| ஹரி: ஓம் ||

ஹிரண்யவர்ணாம் ஹரிணீம் ஸுவர்ண ரஜதஸ்ரஜாம் |
சந்த்3ராம் ஹிரண்மயீம் லக்ஷ்மீம் ஜாதவேதோ3 ம ஆவஹ | 1
தாம் ம ஆவஹ ஜாதேவேதோ3 லக்ஷ்மீ மநபகா3மிநீம் |
யஸ்யாம் ஹிரண்யாம் விந்தே3யம் கா3மSஶ்வம் புருஷாநஹம் | 2
அSஶ்வபூர்வாம் ரத2மத்4யாம் ஹஸ்திநாத ப்ரபோ3தி4நீம் |
Sஶ்ரியம் தே3வீமுபஹ்வயே ஶ்ரீர்மாதே3வீ ஜுஷதாம் | 3
காம் ஸோஸ்மிதாம் ஹிரண்ய ப்ராகாராமார்த்3ராம்
ஜ்வலந்தீம் த்ருப்தாம் தர்பயந்தீம் |
பத்3மே ஸ்தி2தாம் பத்3மவர்ணாம் த்வாமிஹோபஹ்வயே Sஶ்ரியம் | 4
சந்த்3ராம் ப்ரபா4ஸாம் யSஸா ஜ்வலந்தீம் Sஶ்ரியம்
லோகே தே3வஜுஷ்டாமுதா3ராம் |
தாம் பத்3மநேமீம் Sரணமஹம் ப்ரபத்3யேSலக்ஷ்மீர்மே
நSஶ்யதாம் த்வாம் வ்ருணே | 5
ஆதி3த்யவர்ணே தபஸோSதி4 ஜாதோ வநஸ்பதிஸ்தவ வ்ருக்ஷோத2 பி3ல்வ: |
தஸ்ய ப2லாநி தபஸா நுத3ந்து மாயாந்தராயாSஶ்ச பா3ஹ்யா அலக்ஷ்மீ: | 6

உபைது மாம் தே3வஸக2: கீர்தி஽ஶ்ச மணிநாஸஹ |
ப்ராது3ர்பூ4தோ஽ஸ்மி ராஷ்ட்ரே஽ஸ்மிந் கீர்திம்ருத்3தி4ம் த3தா3து மே | 7
க்ஷுத்பிபாஸாமலாம் ஜ்யேஷ்டா2மலக்ஷ்மீர்நா஽யாம்யஹம் |
அபூ4திமஸம்ருத்3தி4ம் ச ஸர்வாம் நிர்ணுத3 மே க்3ருஹாத் | 8
க3ந்த4த்3வாராம் து3ராத4ர்ஷாம் நித்யபுஷ்டாம் கரீஷிணீம் |
ஈ஽ஶ்வரீம் ஸர்வபூ4தாநாம் தாமிஹோபஹ்வயே ஶ்ரியம் || 9
மநஸ: காமமாகூதிம் வாசஸ் ஸத்யம஽ஶீமஹி |
ப஽ஶூநாம் ரூபமந் நஸ்ய மயி ஶ்ரீ஽ஶ்ரயதாம் ய஽: | 10
கர்த3மேந ப்ரஜா பூ4தா மயி ஸம்ப4வ கர்த3ம |
ஶ்ரியம் வாஸய மே குலே மாதரம் பத்3மமாலிநீம் | 11
ஆப: ஸ்ருஜந்து ஸ்நிக்3தா4நி சிக்லீத வஸ மே க்3ருஹே |
நி ச தே3வீம் மாதரம் ஶ்ரியம் வாஸய மே குலே | 12
ஆர்த்3ராம் புஷ்கரிணீம் புஷ்டிம் பிங்க3ளாம் பத்3மமாலிநீம் |
சந்த்3ராம் ஹிரண்மயீம் லக்ஷ்மீம் ஜாதவேதோ3 ம ஆவஹ | 13
ஆர்த்3ராம் ய: கரிணீம் யஷ்டிம் ஸுவர்ணாம் ஹேமமாலிநீம் |
ஸூர்யாம் ஹிரண்மயீம் லக்ஷ்மீம் ஜாதவேதோ3 ம ஆவஹ | 14
தாம் ம ஆவஹ ஜாதவேதோ3 லக்ஷ்மீமநபகா3மிநீம் |
யஸ்யாம் ஹிரண்யம் ப்ரபூ4தம் கா3வோ
தா3ஸ்யோ஽ஶ்வாந் விந்தே3யம் புருஷாநஹம் | 15

பத்₃மப்ரியே பத்₃மிநி பத்₃மஹஸ்தே பத்₃மாலயே பத்₃மத₃ளாயதாக்ஷி |

விSஷப்ரியே விஷ்ணுமநோநுகூலே த்வத்பாத₃மத்₃மம் மயி ஸந்நித₄த்ஸ்வ |16

Sஐயை ஜாத: Sஐய ஆநிர்யாய Sஐயம் வ்யோ ஜநித்ருப்₄யோ த₃தா₄து |

Sஐயம் வஸாநா அம்ருதத்வமாயந் ப₄வந்தி ஸத்₃யஸ்ஸமிதா₄ மிதத்₃யூந் | 17

Sஐய ஏவைநம் தச்ச்₂ரியாமாத₃தா₄தி |

ஸந்ததம்ருசா வஷட்ருக்த்யம் ஸந்த₄த்தம் ஸந்தீ₄யதே ப்ரஜயா பS¦பி₄: | 18

ய ஏவம் வேத₃ |

ஓம் மஹாதே₃வ்யை ச வித்₃மஹே விஷ்ணுபத்ந்யை ச தீ₄மஹி |

தந்நோ லக்ஷ்மீ: ப்ரசோத₃யாத் || 19

- "ஸ்ரீமதே நாராயணாய நம: ஸமஸ்தபரிவாராய ஸர்வ மங்களவிக்₃ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று சொல்லி ஸ்நானாஸனத்தைப் பூர்த்தி செய்யவும்.

# அலங்காராஸனம்

- அர்க்4ய, பாத்4ய, ஆசமனீய, ஸ்நாநீய வட்டில்களில் மீதமுள்ள தீர்த்தத்தை படிகத்தில் சேர்த்துவிடவும்.
- அர்க்4ய, பாத்4ய, ஆசமனீய, பானீய வட்டில்களில் திருக்காவேரியிலிருந்து புதிய தீர்த்தத்தை சேர்த்துக் கொண்டு திருத்துழாய் பரிமாறவும்.
- திருத்துழாய்தளத்தை ஆட்காட்டி விரல், நடு விரல் இரண்டுக்கும் நடுவில் இடுக்கிக் கொண்டு அர்க்4ய, பாத்4ய, ஆசமனீய, பானீய, சுத்4தோ3த3க வட்டில்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே ஸ்பர்சித்து "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று ஐந்து முறை அனுஸந்திக்கவும்.

**திருவாய்மொழி**

வகையால் மனமொன்றி மாதவனை * நாளும்
புகையால் விளக்கால் புதுமலரால் நீரால் **
திசைதோறு அமரர்கள் சென்று இறைஞ்ச நின்ற *
தகையான் சரணம் தமர்கட்கு ஓர்பற்றே 10.4.10

- "ஸ்ரீமதே நாராயணாய நம: ஸ்ரீம் ச்ரியை நம: பூ4ம் பூ4ம்யை நம: நீம் நீளாயை நம: ஸமஸ்தபரிவாராய ஸர்வ மங்களவிக்3ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் அலங்காராஸனம் கண்டருள வேணும்" என்று ப்ரார்த்தித்து எம்பெருமான் திருவடிகளில் திருத்துழாய் சமர்ப்பிக்கவும்.
- அர்க்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்3த4ரணி தீர்த்தம் எடுத்து "ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் அர்க்4யம் கண்டருள வேணும்" என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- சுத்4தோ3த3க பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து படிகத்தில் சேர்த்து உத்தரணியை சோதிக்கவும்.
- இரண்டு தடவை பாத்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து "ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் பாத்4யம்

கண்டருள வேணும்" என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.

- சுத்4தோ3த3க பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து படிகத்தில் சேர்த்து உத்தரணியை சோதிக்கவும்.
- மூன்று தடவை ஆசமனீய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து "ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் ஆசமநீயம் கண்டருள வேணும்" என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- தனி வஸ்திரத்தின் (ஒரு பட்டு வஸ்திரம்) ஒரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால் எம்பெருமானுடைய திருப்பவளத்தையும், திருக்கைகளையும் சோதித்து, மற்றொரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால் எம்பெருமானுடைய திருவடிகளை சோதித்து, வஸ்திரத்தை கண்களில் ஒற்றிக்கொள்ளவும்.
- ஆசாரியன் திருக்கைகளால் திருவொற்றாடை, திருமண்காப்பு, ஸ்ரீசூர்ணகாப்பு, திருபீதாம்பரம், திருயக்ஞோபவீதம், திவ்யாபரணம், திவ்யாயுதம், சாற்றுப்படி, புஷ்பம் கண்டு அருள வேணும் என்று ப்ரார்த்தித்து திருத்துழாய் சமர்ப்பிக்கவும்.

## திருப்பீதாம்பரம் (திருவாய்மொழி)

பூசும் சாந்து என்நெஞ்சமே * புனையும் கண்ணி எனதுடையே *
வாசகம் செய் மாலையே * வான்பட்டாடையும் அஃதே **
தேசமான அணிகலனும் * என் கைகூப்புச் செய்கையே *
ஈசன் ஞாலமுண்டுமிழ்ந்த எந்தை ஏக மூர்த்திக்கே 4.3.2

## திவ்யாபரணங்கள் (ஸ்தோத்ர ரத்னம்)

ஸ்பு2ரத் கிரீடாங்க3த3 ஹார கண்டி2கா
மணிந்த்3ர காஞ்சீகு3ண நூபுராதி3பி4:
ரதா2ங்க3 Sங்கா2ஸி க3தா3 த4நுர்வரை:
லஸத்துலஸ்யா வநமாலயோஜ்ஜ்வலம் 36

**ஸ்ரீ Sரணாக3தி க3த்3யம்**

ஸ்வோசித விவித4 விசித்ராநந்த * ஆச்சர்ய நித்ய நிரவத்3ய * நிரதிSய ஸுக3ந்த4 நிரதிSய ஸுக2ஸ்பரிS * நிரதிSய ஔஜ்வல்ய * கிரீடா மகுட சூடா3வதம்ஸ * மகரகுண்ட3ல க்3ரைவேயக * ஹார கேயூர கடக * ஸ்ரீவத்ஸ கௌஸ்துப4 முக்தா தா3ம * உத3ர ப3ந்த4ந * பீதாம்ப3ர காஞ்சீகு3ண * நூபுராத்3ய பரிமித * தி3வ்யபூ4ஷண

**நான்முகன் திருவந்தாதி**

மங்குல்தோய் சென்னி * வடவேங்கடத்தானை *
கங்குல் புகுந்தார்கள் * காப்பணிவான் **
திங்கள் சடையேற வைத்தானும் * தாமரை மேலானும் *
குடையேறத்தாம் * குவித்துக் கொண்டு 43

**திருவிருத்தம்**

சூட்டுநன் மாலைகள் தூயனவேந்தி * விண்ணோர்கள் நன்னீர்*
ஆட்டி அந்தூபம் தரா நிற்கவே * அங்கு ஓர் மாயையினால் *
ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் * போந்துமிலேற்று வன்கூன் *
கோட்டிடையானை கூத்து * அடலாயர்தம் கொம்பினுக்கே * 21

**திவ்யாயுதங்கள்**

**ஸ்ரீ Sரணாக3தி க3த்3யம்**

ஸ்வாநு ரூப * அசிந்த்ய Sக்தி Sங்க2 சக்ர க3தா3 S¡ர்ங்கா3த்3ய ஸங்க்2யேய * நித்ய நிரவத்3ய * நிரதிSய கல்யாண * தி3வ்யாயுத4

**சாற்றுப்படி**

| | ||
க3ந்த4த்3வாராம் து3ராத4ர்ஷாம் நித்யபுஷ்டாம் கரீஷிணீம் |
| | |
ஈSவரீகும் ஸர்வபூ4தாநாம் தாமிஹோபஹ்வயே Sரியம் ||

## புஷ்பம்

## பெரியாழ்வார் திருமொழி - கண்ணனை பூச்சூட அழைத்தல்

**ஆனிரை மேய்க்க நீபோதி * அருமருந்து ஆவதறியாய் *
கானகம் எல்லாம் திரிந்து * உன்கரிய திருமேனி வாட **
பானையில் பாலைப் பருகிப் * பற்றாதார் எல்லாம் சிரிப்ப *
தேனில் இனிய பிரானே * செண்பகப் பூ சூட்டவாராய் * 2.7.1

கருவுடை மேகங்கள் கண்டால் * உன்னைக் கண்டால் ஒக்கும் கண்கள் *
உருவுடையாய்! உலகேழும் * உண்டாக வந்து பிறந்தாய்! **
திருவுடையாள் மணவாளா! * திருவரங்கத்தே கிடந்தாய் *
மருவிமணம் கமழ்கின்ற * மல்லிகைப்பூ சூட்டவாராய் * 2.7.2

மச்சொடு மாளிகை ஏறி * மாதர்கள் தம்மிடம்புக்கு *
கச்சொடு பட்டைக் கிழித்துக் * காம்பு துகிலவை கீறி **
நிச்சலும் தீமைகள் செவ்யாய்! * நீள் திருவேங்கடத்து எந்தாய்!*
பச்சை தமனகத்தோடு * பாதிரிப்பூ சூட்டவாராய் * 2.7.3

தெருவின்கண் நின்று இளவாய்ச்சிமார்களைத் * தீமை செய்யாதே *
மருவும் தமனகமும்சீர் * மாலை மணம் கமழ்கின்ற **
புருவம் கருங்குழல் நெற்றி * பொலிந்த முகிற் கன்று போலே *
உருவமழகிய நம்பீ! * உகந்திவை சூட்ட நீ வாராய் * 2.7.4

புள்ளினை வாய் பிளந்திட்டாய்! * பொருகரியின் கொம்பொசித்தாய்! *
கள்ளவரக்கியை மூக்கொடு * காவலனைத் தலை கொண்டாய்! **
அள்ளி நீ வெண்ணெய் விழுங்க * அஞ்சாது அடித்தேன் *
தெள்ளிய நீரில் எழுந்த * செங்கழுநீர் சூட்டவாராய் * 2.7.5

எருதுகளோடு பொருதி * ஏதும் உலோபாய்காண் நம்பி *
கருதிய தீமைகள் செய்து * கஞ்சனைக் கால்கொடு பாய்ந்தாய்! **
தெருவின்கண் தீமைகள் செய்து * சிக்கென மல்லர்களோடு *
பொருது வருகின்ற பொன்னே! * புன்னைப் பூ சூட்டவாராய் * 2.7.6

குடங்கள் எடுத்தேறவிட்டு * கூத்தாட வல்லஎம்கோவே! *
மடங்கொள் மதிமுகத்தாரை * மால்செய்யவல்ல என்மைந்தா! **
இடந்திட்டு இரணியன் நெஞ்சை * இருபிளவாக முன்கீண்டாய் *
குடந்தை கிடந்த எம்கோவே! * குருக்கத்திப்பூச் சூட்டவாராய் * 2.7.7

சீமாலிகன் அவனோடு * தோழமை கொள்ளவும் வல்லாய்! *
சாமாறு அவனை நீ எண்ணிச் * சக்கரத்தால் தலைக்கொண்டாய்! **
ஆமாறறியும் பிரானே! * அணியரங்கத்தே கிடந்தாய்! *
ஏமாற்றம் என்னைத் தவிர்த்தாய்! * இருவாட்சிப்பூச் சூட்டவாராய் * 2.7.8

அண்டத்தமரர்கள் சூழ * அத்தாணியுள் அங்கிருந்தாய்! *
தொண்டர்கள் நெஞ்சிலுறைவாய்! * தூமலராள் மணவாளா! **
உண்டிட்டு உலகினையேழும் * ஓராலிலையில் துயில்கொண்டாய் *
கண்டு நான் உன்னை உகக்கக் * கருமுகைப்பூச் சூட்டவாராய் * 2.7.9

** செண்பக மல்லிகையோடு * செங்கழுநீர் இருவாட்சி *
எண்பகர் பூவும் கொணர்ந்தேன் * இன்று இவை சூட்டவாவென்று **
மண்பகர் கொண்டானை * ஆய்ச்சி மகிழ்ந்துரை செய்த இம்மாலை *
பண்பகர் வில்லிபுத்தூர்கோன் * பட்டர்பிரான் சொன்னபத்தே * 2.7.10

**தூபம்**

தூ4ரஸி தூ4ர்வ தூ4ர்வந்தம் தூ4ர்வதம் யோSஸ்மாந்
தூ4ர்வதி தம் தூ4ர்வயம் வயம் தூ4ர்வாமஸ்த்வம் தே3வாநாமஸி

**திருவாய்மொழி**

பரிவதிலீசனைப் பாடி விரிவது மேவலுறுவீர்
பிரிவகையின்றி நன்னீர் தூய்ப் புரிவதுவும் புகை பூவே 1.6.1

**தீபம்**

உத்3தீ3ப்யஸ்வ ஜாதவேதோ3: அபக்4னந் நிருருதிம் மம
புசூுக்ச மஹ்யம் ஆவஹ ஜீவநம் ச தி3சோத3ச

**முதல் திருவந்தாதி**

வையம் தகளியா * வார்கடலே நெய்யாக *
வெய்யகதிரோன் விளக்காக ** செய்ய
சுடராழியான் அடிக்கே * சூட்டினேன் சொல்மாலை *
இடராழி நீங்குகவே என்று * 1

**இரண்டாம் திருவந்தாதி**

அன்பேதகளியா * ஆர்வமே நெய்யாக *
இன்புருகுசிந்தை இடுதிரியா ** நன்புருகி
ஞானச்சுடர்விளக்கு ஏற்றினேன் * நாரணற்கு *
ஞானத் தமிழ் புரிந்த நான் * 1

வடிக்கோல வாள்நெடுங்கண் * மாமலராள் * செவ்விப்
படிக்கோலம் * கண்டு அகலாள் பன்னாள் * அடிக்கோலி
ஞாலத்தாள் பின்னும் * நலம்புரிந்த தென்கொலோ *
கோலத்தால் இல்லை குறை * 82

**மூன்றாம் திருவந்தாதி**

திருக்கண்டேன் * பொன்மேனி கண்டேன் * திகழும்
அருக்கண் * அணிநிரமும் கண்டேன் ** செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் * புரிசங்கம் கைக்கண்டேன் *
என்னாழி வண்ணன்பால் இன்று * 1

- “ஸ்ரீமதே நாராயணாய நம: ஸமஸ்தபரிவாராய ஸர்வ மங்களவிக்3ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம:” என்று சொல்லி அலங்காராஸனத்தைப் பூர்த்தி செய்யவும்.

# மந்த்ர புஷ்பம்

- திருத்துழாய், புஷ்பம் இவைகளை தாம்பாளத்தில் வைத்து, கைகளில் தாம்பாளத்தை மார்பு அளவாக வைத்துக் கொண்டு, கீழ்க்கண்ட மந்த்ரங்களைச் சொல்லி எம்பெருமானிடம் சேர்க்கவும்.

**ருக்வேதம்**

ஹரி: ஓம் | அக்3னிமீளே புரோஹிதம் யக்3ஞஸ்ய தே3வம்ருத்விஜம் | ஹோதாரம் ரத்நதா4தமம் | ஹரி: ஓம்

**யஜுர்வேதம்**

ஹரி: ஓம் | இஷே த்வோர்ஜே த்வா வாயவஸ்ஸ்தோ2பாயவஸ்ஸ்த2தே3வோ வ: ஸவிதா ப்ரார்ப்பயது ச்ரேஷ்டதமாயகர்மணே | ஹரி: ஓம்

**ஸாமவேதம்**

ஹரி: ஓம் | அக்3ந ஆயாஹிவீதயே க்3ருணாநோ ஹவ்யதா3தயே | நிஹோதா ஸாத்2ஸி ப3ர்ஹிஷி | ஹரி: ஓம்

**அதர்வணவேதம்**

ஹரி: ஓம் | S ந்நோதே3வீர் அபி4ஷ்டய ஆபோ ப4வந்து பீதயே | S ம்யோ ரபி4ஸ்ரவந்து ந: | ஹரி: ஓம்

**உபநிஷத்**

ஹரி: ஓம் | ஓம் இத்யக்3ரே வியாஹரேத் | நம இதிப Sஊத் | நாராயணாயேத்யுபரிஷ்டாத் | ஓமித்யே காக்ஷரம் | நம இதி த்3வே அக்ஷரே | நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி | ஏதத்3வை நாராயணஸ்யாஷ்டாக்ஷரம் பத3ம் | யோஹவை நாராயண ஸ்யாஷ்டாக்ஷரம் பத3மத்4யேதி | அநபப்3ருவ: ஸர்வமாயுரேதி | விந்த3தே ப்ராஜாபத்யம் ராயஸ்போஷம் கௌ3ளபத்யம் | ததோऽம்ருதத்வம் Sநுதே ததோऽம்ருதத்வ ம Sநுத இதி | ய ஏவம் வேத3 |

இத்யுபநிஷத் | அத2கர்மாண்யா சாராத்3யாநி க்3ருஹ்யந்தே | உத3க3யந
பூர்வபக்ஷாஹ: புண்யாஹேஷு கார்யாணி |யஞ்ஜோபவீதிநா ப்ரத3க்ஷிணம்|

**ஶ்ரீராமாயணம்**

தபஸ்வாத்யாய நிரதம் தபஸ்வீவாக் விதம்வரம்
நாரதம் பரிபப்ரச்ச வால்மிகிர் முநிபுங்கவம்
இச்சா2மோ ஹி மஹாபா3ஹும் ரகு4வீரம் மஹாப3லம்
க3ஜேந மஹதாऽऽயாந்தம் ராமம் ச2த்ராவ்ருதாநநம்
தம் த்3ருஷ்ட்வா ऽத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகா2வஹம்
ப3பூ4வ ஹ்ருஷ்டா வைதே3ஹீ ப4ர்தாரம் பரிஷஸ்வஜே
தாஸாமாவிரபூ4ச்சௌ2ரி: ஸ்ம்யமாநமுகா2ம்புஜ:
பீதாம்ப3ரத4ர: ஸ்ரக்3வீ ஸாக்ஷாந்மந்மத2மந்மத2:

**ஶ்ரீ பகவத்கீதை**

த4ர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதாயுயுத்ஸவ:
மாமகா: பாண்ட3வர்ऽசைவ கிமகுர்வத ஸஞ்ஜய
ஸர்வ த4ர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ऽரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்4யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:

**ஶ்ரீவிஷ்ணுபுராணம்**

பராசரம் முநிவரம் க்ருதபௌர்வாஹ்னிகக்ரியம்
மைத்ரேயே: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபி வாத்யச

**புராணங்கள்**

ஏஷ நாராயண: ஶ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:
நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்
வைகுண்டே து பரே லோகே ऽரியா ஸார்த்தம் ஜகத்பதி:
ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ:

**ஸ்தோத்ர ரத்நம்**

நமோऽசிந்த்யாத்3 புத4தாக்லிஷ்ட ஜ்ஞாந வைராக்3யரா S யே
நாதா2ய முநயேऽகா3த4 ப4க3வத்3ப4க்தி ஸிந்த4வே

**ஸ்ரீபாஷ்யம்**

அகில புவந ஜந்ம ஸ்தேம பங்காதி லீலே
விநத விவித பூதவ்ராத ரகஷைகக தீக்ஷே
S ருதி S ரஸிவிதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே
பவது மம பரஸ்மிந் § S முஷீ பக்திரூபா

பாரா S ர்ய வசஸ்ஸுதா உபநிஷத் துக்தாப்தி மத்யோ த்த்ருதாம்
ஸம்ஸாராக்நி விதீபந வ்யபகத ப்ராணாத்ம ஸஞ்ஜீவநீம்
பூர்வாசார்ய ஸுரக்ஷிதாம் பஹுமதி வ்யாகாத தூரஸ்திதா
மாநீதாம்து நிஜாக்ஷரைஸ்ஸி மநஸோ பௌமா: பிபந்த்வந்வஹம்

**வரதராஜ ஸ்தவம்**

ஸ்ரீநிதி4ம் நிதி4மபாரமர்தி2நாம் அர்திதார்த2பரிதா3ந தீக்ஷிதம்
ஸர்வபூ4தஸுஹ்ருத3ம் த3யாநிதி4ம் தே3வராஜமதி4ராஜமம S ஏயே 2

**யதிராஜ விம் S தி**

ஸ்ரீமாத4வாங்க்4ரி ஜலஜத்3வய நித்யஸேவா
ப்ரேமாவிலா S ய பராங்கு S பாத3ப4க்தம்
காமாதி3தோ3 S ஹரமாத்மபதா3 S ரிதாநாம்
ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்4நா 2

விஜ்ஞாபநம் யதி3த3மத்3ய து மாமகீநம்
அங்கீ3குருஷ்வ யதிராஜ! த3யாம்பு3ராஷே
அஜ்ஞோऽயமாத்ம கு3ணலே S விவர்ஜித S ச
தஸ்மாத3நந்ய S ரணோ ப4வதீதி மத்வா 21

**உத்தர தினசர்யா**

அபக3தமத3மாநை: அந்திமோபாய நிஷ்டை2:
அதி4க3தபரமார்த்தை2: அர்த2காமாநபேக்ஷை:
நிகிலஜலஸுஹ்ருத்3பி4: நிர்ஜிதக்ரோத4லோபை4:
வரவர முநிப்4ருத்யைரஸ்து மே நித்யயோக3:

கதா3 புந: Sங்க2ரதா2ங்க3 கல்ப த்4வஜார விந்தா3ங்குS வஜ்ரலாஞ்ச2நம்
த்ரிவிக்ரம! த்வச்சரணாம்பு3ஜத்3வயம் மதீ3யமூர்தா4நமலங்கரிஷ்யதி

**முதல் திருவந்தாதி**

சென்றால் குடையாம் * இருந்தால் சிங்காசனமாம் *
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் * என்றும்
புணையாம் மணிவிளக்காம் * பூம்பட்டாம் புல்கும்
அணையாம் * திருமாற்கு அரவு 53

# திருநாம அர்ச்சனை

ஓம் கேSவாய நம:
ஓம் நாராயணாய நம:
ஓம் மாத4வாய நம:
ஓம் கோ3விந்தா3ய நம:
ஓம் விஷ்ணவே நம:
ஓம் மது4ஸூத3நாய நம:
ஓம் த்ரிவிக்ரமாய நம:
ஓம் வாமநாய நம:
ஓம் ஸ்ரீத4ராய நம:
ஓம் ஹ்ருஷிகேசாய நம:
ஓம் பத்3மநாபா4ய நம:
ஓம் தா3மோத3ராய நம:

ஓம் வாசுதே3வாய நம:
ஓம் ஸங்கர்ஷணாய நம:
ஓம் ப்ரத்3யும்நாய நம:
ஓம் அநிருத்4தா3ய நம:
ஓம் மத்ஸ்யாய நம:
ஓம் கூர்மாய நம:
ஓம் வராஹாய நம:
ஓம் நரஸிம்ஹாய நம:
ஓம் வாமநாய நம:
ஓம் பா4ர்கவராமாய நம:
ஓம் ஸ்ரீராமாய நம:
ஓம் ப3லராமாய நம:
ஓம் க்ருஷ்ணாய நம:
ஓம் கல்கிநே நம:

ஓம் Sரியை நம:
ஓம் அம்ருதோத்3ப4வாயை நம:
ஓம் கமலாயை நம:
ஓம் சந்த்3ரஸோத3ர்யை நம:
ஓம் விஷ்ணுபத்யை நம:
ஓம் வைஷ்ணவ்யை நம:
ஓம் வராரோஹாயை நம:
ஓம் ஹரிவல்லபா4யை நம:
ஓம் S¡ர்ங்கிண்யை நம:
ஓம் தே3வதே3விகாயை நம:
ஓம் ஸூரஸுந்த3ர்யை நம:
ஓம் மஹாலக்ஷ்ம்யை நம:
ஓம் ஸர்வாபீ4ஷ்ட ப2லப்ரதா3யாயை நம:

ஸ்ரீபூ4மி நீளாஸமேத ஸ்ரீமதே நாராயணாய நம:

- 108 திருப்பதி எம்பெருமான்களின் திருநாம அர்ச்சனையும் இவ்விடம் செய்யலாம்.
- "ஸ்ரீமதே நாராயணாய நம: ஸமஸ்தபரிவாராய ஸர்வ மங்களவிக்3ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று சொல்லி திருநாம அர்ச்சனையைப் பூர்த்தி செய்யவும்.

# அருளிச் செயல் ஸேவாகாலம்

- ஆசாரியன், பரமாசாரியன் தனியன்களை அனுஸந்திக்கவும்.

**மணவாள மாமுனிகள் தனியன்**

**(அழகிய மணவாளன் அருளிச்செய்தது)**

ஸ்ரீசைலேச த3யாபாத்ரம் தீ4ப4க்த்யாதி3 கு3ணார்ணவம்
யதீந்த்3ர ப்ரவணம் வந்தே3 ரம்யஜாமாதரம் முநிம்

**குரு பரம்பரை தனியன்**

**(கூரத்தாழ்வான் அருளிச்செய்தது)**

லக்ஷ்மீ நாத2 ஸமாரம்பா4ம் நாத2யாமுந மத்4யமாம்
அஸ்மதா3சார்ய பர்யந்தாம் வந்தே3 கு3ரு பரம்பராம்

**எம்பெருமானார் தனியன் (கூரத்தாழ்வான் அருளிச்செய்தது)**

யோ நித்யம் அச்யுத பதா3ம்பு3ஜ யுக்3மருக்ம
வ்யாமோஹதஸ் ததி3தராணி த்ருணாய மேநே
அஸ்மத்3 கு3ரோர் ப4கவதோऽஸ்ய த3யைகஸிந்தோ4:
ராமாநுஜஸ்ய சரணௌ S ரணம் ப்ரபத்3யே

**நம்மாழ்வார் தனியன் (ஆளவந்தார் அருளிச்செய்தது)**

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூ4தி:
ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம்
ஆத்3யஸ்ய ந: குலபதேர் வகுளாபி4ராமம்
ஸ்ரீமத் தத3ங்க்4ரி யுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா

**ஆழ்வார்கள் உடையவர் தனியன் (ஸ்ரீபராசர பட்டர் அருளிச்செய்தது)**

பூ4தம் ஸரஸ்ய மஹதா3ஹ்வய ப4ட்ட நாத2
ஸ்ரீப4க்திஸார குலசேக2ர யோகி3வாஹாந்
ப4க்தாங்க்4ரிரேணு பரகால யதீந்த்3ரமி S ஶ்ரந்
ஸ்ரீமத் பராங்கு S முநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம்

- திருப்பல்லாண்டு
- திருப்பள்ளியெழுச்சி
- திருப்பாவை
- அமலனாதிபிரான்
- பெரியாழ்வார் திருமொழி (காப்பிடல், சென்னியோங்கு)
- கண்ணிநுன் சிறுத்தாம்பு
- கோவில் திருவாய்மொழி
- இராமாநுச நூற்றந்தாதி
- உபதேச இரத்தினமாலை
- திருவாய்மொழி நூற்றந்தாதி
- யதிராஜ விம்ஸதி

# போஜ்யாஸனம்

- பெருமாளுக்கு எதிரில் ஸ்தலசுத்தி செய்து தளிகையை வைக்கவும்.
- அர்க்4ய வட்டிலில் இருந்து உத்தரணியால் தீர்த்தத்தை எடுத்து "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று சொல்லி தளிகையை ப்ரோக்ஷித்து திருத்துழாயை தளிகையில் சேர்க்கவும்.

யாப்ரீதீர் விதுரார்பிதே முராரிபோ குந்த்யர்பிதே யாத்ரூசீ
யாகோவர்தந மூர்த்தி யாச ப்ருதுகே ஸ்தந்யே யசோதார்பிதே
பாரத்வாஜஸமர்ப்பிதே சபரிகாதத்தேதரே யோஷிதாம்
யாப்ரீதீர் முநிபத்நி பக்திரசிதேப்யத்ராபி தாம் தாம் குரு

- "ஸ்ரீமதே நாராயணாய நம: ஸ்ரீம் ச்ரியை நம: பூ4ம் பூ4ம்யை நம: நீம் நீளாயை நம: ஸமஸ்தபரிவாராய ஸர்வ மங்களவிக்3ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம: இதம் ஸவ்யஞ்சனம், சபக்ஷ்யம், ஸபாயஸம், போஜ்யம், நாநாவித சாகாநி ஸகித, நாநாவித பக்ஷ்யாணி ஸகித, நாநாவித வ்யஞ்சனானி, நாநாவித பலானி ஸகித ஆசாரியன் திருக்கைகளால் திருப்போனகம் கண்டருள வேணும்" என்று ப்ரார்த்தித்து எம்பெருமான் திருவடிகளில் திருத்துழாய் சமர்ப்பிக்கவும்.

- அர்க்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து "ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் அர்க்4யம் கண்டருள வேணும்" என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- சுத்4தோ3த3க பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து படிகத்தில் சேர்த்து உத்தரணியை சோதிக்கவும்.
- இரண்டு தடவை பாத்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து "ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் பாத்4யம் கண்டருள வேணும்" என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- சுத்4தோ3த3க பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து படிகத்தில் சேர்த்து உத்தரணியை சோதிக்கவும்.

- மூன்று தடவை ஆசமனீய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து "ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் ஆசமனீயம் கண்டருள வேணும்" என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- தனி வஸ்திரத்தின் (ஒரு பட்டு வஸ்திரம்) ஒரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால்  எம்பெருமானுடைய திருப்பவளத்தையும், திருக்கைகளையும் சோதித்து, மற்றொரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால் எம்பெருமானுடைய திருவடிகளை சோதித்து, வஸ்திரத்தை கண்களில் ஒற்றிக்கொள்ளவும்.
- பாநீய வட்டிலில் இருந்து உத்தரணியில் தீர்த்தத்தை எடுத்து இடக்கையில் வைத்துக்கொண்டு க்ராஸ முத்திரையினால் ப்ராணாய ஸ்வாஹா, அபாநாய ஸ்வாஹா, வ்யாநாய ஸ்வாஹா, உதாநாய ஸ்வாஹா, ஸமாநீய ஸ்வாஹா, ப்ரஹ்மணே ஸ்வாஹா என்று கூறி பரிசேஷனம் சமர்ப்பிக்கவும்.
- திருத்துழாயை விரலில் இடுக்கிக் கொண்டு, பெரிய பிராட்டியார் திருக்கைகளால் சமர்ப்பிப்பதாக எண்ணி ஒவ்வொரு திருப்போனகத்துக்கும் மூன்று தடவை "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று அனுஸந்தித்து கண்டருளப் பண்ணவும்.
- பானீய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து "ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் பானீயம் கண்டருள வேணும்" என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- தனி வஸ்திரத்தின் (ஒரு பட்டு வஸ்திரம்) ஒரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால்  எம்பெருமானுடைய திருப்பவளத்தையும், திருக்கைகளையும் சோதித்து, மற்றொரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால் எம்பெருமானுடைய திருவடிகளை சோதித்து, வஸ்திரத்தை கண்களில் ஒற்றிக்கொள்ளவும்.

- ப்ராஸாதங்களை மூன்று பாகங்களாக பாவித்து,
- "ஸ்ரீம் ச்ரியை நம: ஆசாரியன் திருக்கைகளால் திருப்போனகம் கண்டு அருள வேணும்" என்று சமர்ப்பிக்கவும்.
- "பூ4ம் பூ4ம்யை நம: ஆசாரியன் திருக்கைகளால் திருப்போனகம் கண்டு அருள வேணும்" என்று சமர்ப்பிக்கவும்.

- "நீம் நீளாயை நம: ஆசாரியன் திருக்கைகளால் திருப்போனகம் கண்டு அருள வேணும்" என்று சமர்ப்பிக்கவும்.

- "ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாய நம: ஆசாரியன் திருக்கைகளால் திருப்போனகம் கண்டு அருள வேணும்" என்று சமர்ப்பிக்கவும்.
- "அநந்தாய நாக3ராஜாய நம:  ஆசாரியன் திருக்கைகளால் திருப்போனகம் கண்டு அருள வேணும்" என்று சமர்ப்பிக்கவும்.
- "வைநதே4யாய பக்ஷிராஜாய நம: ஆசாரியன் திருக்கைகளால் திருப்போனகம் கண்டு அருள வேணும்" என்று சமர்ப்பிக்கவும்.
- "ஸுத3ர்சநாய ஹேதிராஜாய நம: ஆசாரியன் திருக்கைகளால் திருப்போனகம் கண்டு அருள வேணும்" என்று சமர்ப்பிக்கவும்.
- "பாஞ்சஜந்யாய Sங்கா2திபதயே நம: ஆசாரியன் திருக்கைகளால் திருப்போனகம் கண்டு அருள வேணும்" என்று சமர்ப்பிக்கவும்.

- "ஸ்ரீமத்3ப்4ய: பராங்குச பரகாலாதி3ப்4யோ நம: ஆசாரியன் திருக்கைகளால் திருப்போனகம் கண்டு அருள வேணும்" என்று சமர்ப்பிக்கவும்.
- "அஸ்மத் குருப்யோ நம: திருப்போனகம் கண்டு அருள வேணும்" என்று சமர்ப்பிக்கவும்.

**திருப்பாவை**

கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா * உன்தன்னைப்
        பாடிப் பறை கொண்டு யாம் பெறு சம்மானம் *
நாடு புகழும் பரிசினால் நன்றாகச் *
        சூடகமே தோள் வளையே தோடே செவிப் பூவே **
பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம் *
        ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு *
மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக் *
        கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய் * 27

## நாச்சியார் திருமொழி

நாறு நறும் பொழில் * மாலிருஞ்சோலை நம்பிக்கு நான் *
நூறு தடாவில் வெண்ணெய் * வாய்நேர்ந்து பராவிவைத்தேன் *
நூறு தடா நிறைந்த * அக்கார வடிசில் சொன்னேன் *
ஏறு திருவுடையான் * இன்று வந்திவை கொள்ளுங்கலோ! * 89

இன்று வந்து இத்தனையும் * அமுதுசெய்திடப் பெறில் நான் *
ஒன்று நூறாயிரமாகக் கொடுத்து * பின்னும் ஆளும் செய்வன் *
தென்றல் மணங்கமழும் * திருமாலிருஞ்சோலை தன்னுள் *
நின்ற பிரான் அடியேன் மனத்தே * வந்து நேர்படிலே 90

## பெரியாழ்வார் திருமொழி

அப்பம் கலந்த சிற்றுண்டி * அக்காரம் பாலில் கலந்து *
சொப்பிட நான் சுட்டு வைத்தேன் * தின்னல் உறுதியேல் நம்பீ! **
செப்பிள் மென்முலையார்கள் * சிறு புறம் பேசிச் சிரிப்பர் *
சொப்பிட நீராட வேண்டும் * சோத்தம்பிரான் ! இங்கே வாராய்! 2.4.5

கன்னல் இலட்டுவத்தோடு சீடை * கார் எள்ளின் உண்டை கலத்திலிட்டு *
என்னகம் என்று நான்வைத்துப் போந்தேன் *
 இவன்புக்கு அவற்றைப் பெறுத்திப் போந்தேன் *
பின்னும் அகம்புக்கு உறியை நோக்கிப் *
 பிறங்கொளி வெண்ணெயும் சோதிக்கின்றான் *
உன்மகன் தன்னை யசோதைநங்காய் ! *
 கூவிக்கொள்ளாய் இவையும் சிலவே * 2.9.9

## பெரிய திருமொழி

மிக்கானை * மறையாய் விரிந்த விளக்கை * என்னுள்
புக்கானைப் * புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை *
தக்கானைக் கடிகை * தடங்குன்றின் மிசையிருந்த *
அக்காரக் கனியை * அடைந்து உய்ந்து போனேனே * 8.9.4

**திருவாய்மொழி**

அடியேன் மேனி அமர்கின்ற அமுதே! * இமையோர் அதிபதியே *
கொடியா அடுபுள் உடையானே! * கோலக் கனிவாய் பெருமானே !*
செடியார் வினைகள் தீர்மருந்தே! * திருவேங்கடத்து எம்பெருமானே !*
நெடியார் பொழுதும் உனபாதம் * காண நோலா தாற்றேனே * 6.10.7

**திருமாலை**

பச்சை மாமலைபோல் மேனி * பவளவாய் கமலச் செங்கண் *
அச்சுதா அமரரேறே * ஆயர்தம் கொழுந்தே என்னும் **
இசசுவை தவிர யான்போய் * இந்திர லோகம் ஆளும் *
அச்சுவை பெறினும்வேண்டேன் அரங்கமாநகருளானே * 2

- “ஸ்ரீமதே நாராயணாய நம: ஸமஸ்தபரிவாராய ஸர்வ மங்களவிக்3ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம:” என்று சொல்லி போஜ்யாஸனத்தைப் பூர்த்தி செய்யவும்.

# புநர்மந்த்ராஸனம்

- “ஶ்ரீமதே நாராயணாய நம: ஶ்ரீம் ச்ரியை நம: பூ4ம் பூ4ம்யை நம: நீம் நீளாயை நம: ஸமஸ்தபரிவாராய ஸர்வ மங்களவிக்3ரஹாய ஶ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் புநர்மந்தராஸனம் கண்டருள வேணும்” என்று ப்ரார்த்தித்து எம்பெருமான் திருவடிகளில் திருத்துழாய் சமர்ப்பிக்கவும்.
- அர்க்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து “ஶ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் அர்க்4யம் கண்டருள வேணும்” என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- சுத்4தோ3த3க பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து படிகத்தில் சேர்த்து உத்தரணியை சோதிக்கவும்.
- இரண்டு தடவை பாத்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து “ஶ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் பாத்4யம் கண்டருள வேணும்” என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- சுத்4தோ3த3க பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து படிகத்தில் சேர்த்து உத்தரணியை சோதிக்கவும்.
- மூன்று தடவை ஆசமனீய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து “ஶ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் ஆசமனீயம் கண்டருள வேணும்” என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- தனி வஸ்திரத்தின் (ஒரு பட்டு வஸ்திரம்) ஒரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால் எம்பெருமானுடைய திருப்பவளத்தையும், திருக்கைகளையும் சோதித்து, மற்றொரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால் எம்பெருமானுடைய திருவடிகளை சோதித்து, வஸ்திரத்தை கண்களில் ஒற்றிக்கொள்ளவும்.
- “ஆசாரியன் திருக்கைகளால் தாம்பூலம் கண்டருள வேணும்” என்று ப்ரார்த்தித்து வெற்றிலை, பாக்கு, பழம், தாம்பூலம் சமர்ப்பிக்கவும்.

பூகீபல ஸமாயுக்தம் நாகவல்லி தளைர்யதம்
கர்ப்பூர சூர்ண ஸம்யுக்தம் தாம்பூலம் ப்ரதி க்ருஹ்யதாம்
கனஸாரஸிரோதக்ரை: க்ரமுகாஷ்டதளைஸ்ஸஹ
விமலாசநிதாம்பூல தளாநி ஸ்வீகுருப்ரபோ

**பெரியாழ்வார் திருமொழி**

போய்ப்பாடுடைய நின் தந்தையும் தாழ்த்தான் *
பொருதிறல் கஞ்சன் கடியன் *
காப்பாருமில்லை கடல் வண்ணா *
உன்னைத்தனியே போயெங்கும் திரிதி **
பேய்ப்பால் முலையுண்ட பித்தனே! *
கேசவ நம்பீ! உன்னைக் காதுகுத்த *
ஆய்ப்பாலர் பெண்டுகளெல்லாரும் வந்தார் *
அடைக்காய் திருத்தி நான் வைத்தேன் 2.3.1

- "ஶ்ரீமதே நாராயணாய நம: ஸமஸ்தபரிவாராய ஸர்வ மங்களவிக்3ரஹாய ஶ்ரீமதே நாராயணாய நம:" என்று சொல்லி மந்த்ராஸனத்தைப் பூர்த்தி செய்யவும்.

# கற்பூர ஆலத்தி

- "ஆசாரியன் திருக்கைகளால் கற்பூர நீராஜனம் கண்டருள வேணும்" என்று ப்ரார்த்தித்து கற்பூர ஆலத்தி சமர்ப்பிக்கவும்.

தத்3விஷ்ணோ: பரமம் பத3ம் ஸதா3பச்யந்தி ஸூரய:
தி3வீவ சக்ஷுராததம் தத்3விப்ராஸோ விபந்யவோ
ஜாக்3ருவாம் ஸஸ்ஸமிந்த4தே விஷ்ணோர்யத் பரமம் பத3ம்
பர்யாப்த்யா அநந்த்ராயாய ஸர்வஸ்தோம:
அதிராத்ர உத்தம மஹ: அஹர்பவதி
ஸர்வஸ்யாப்த்யை ஸர்வஸ்ய ஜித்யை
ஸர்வமேவ தேநாப்நோதி ஸர்வம் ஜயதி

**மங்கள ஸ்லோகங்கள்**

லக்ஷ்மிசரண லாக்ஷாங்க ஸாக்ஷி ஸ்ரீவத்ஸ வக்ஷஸே
க்ஷேமங்கராய ஸர்வேஷாம் ஸ்ரீரங்கேசாய மங்களம்

ஸ்ரீய: காந்தாய கல்யாணநிதயே நிதயேர்த்திநாம்
ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம்

அஸ்து ஸ்ரீஸ்தந கஸ்தூரி வாஸநா வாஸிதோரஸே
ஸ்ரீஹஸ்திகிரிநாதாய தேவராஜய மங்களம்

கமலாகுச கஸ்தூரீ கர்தமாங்கித வக்ஷஸே
யாதவாத்ரி நிவாஸாய ஸ்ம்பத்புத்ராய மங்களம்

ஸ்ரீமத்யை விஷ்ணுசித்தார்ய மநோ நந்தந ஹேதவே
நந்தநந்தந ஸுந்தர்யை கோதாயை நித்ய மங்களம்

ஶ்ரீநகர்யாம் மஹாபுர்யாம் தாப்ரபர்ண்யுத்தரேதடே
ஶ்ரீதிந்த்ரிணீ மூலதாம்நே சடகோபாய மங்களம்

ஶ்ரீமதாலி ஶ்ரீநகரி நாதாய கலிவைரிணே
சதுஷ்கவிப்ரதாநாய பரகாலாய மங்கள,

ஶ்ரீமந்மஹாபூதபரே ஶ்ரீமத் கேசவ யஜ்வந:
காந்திமத்யாம் ப்ரஸூதாய யதிராஜாய மங்களம்

ஶ்ரீமதே ரம்யஜாமாத்ரு முநீந்த்ராய மஹாத்மநே
ஶ்ரீரங்கவாஸிநே பூயாத் நித்யஶ்ரீநித்ய மங்களம்

மங்களாசாஸனபரை: மதாசார்ய புரோகமை:
ஸர்வைச்ச பூ வை: ஆசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம்

# சாற்றுமுறை

**திருப்பாவை**

** சிற்றஞ் சிறு காலே வந்துன்னைச் சேவித்து * உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய் *
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து * நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது **
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா! *
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் * உந்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம் *
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய் ** 29

** வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத் *
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி *
அங்கு அப்பறை கொண்டவாற்றை * அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன **
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே *
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள் *
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் *
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய் * 30

**இராமானுச நூற்றந்தாதி**

** இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் * மாலிருஞ்சோலை என்னும்
பொருப்பிடம் * மாயனுக்கு என்பர் நல்லோர் ** அவை தம்மொடும் வந்து
இருப்பிடம் மாயன் இராமானுசன் மனத்து * இன்றவன் வந்து
இருப்பிடம் * என்தன் இதயத்துள்ளே தனக்கு இன்புறவே 106

** இன்புற்ற சீலத்து இராமானுச! * என்றும் எவ்விடத்தும்
என்புற்ற நோய் * உடல் தோறும் பிறந்து இறந்து ** எண்ணரிய
துன்புற்று வீயினும் சொல்லுவதொன்றுண்டு * உன் தொண்டர்கட்கே
அன்புற்று இருக்கும் படி* என்னை ஆக்கி அங்காட்படுத்தே 107

** அங்கயல்பாய் வயல் தென்னரங்கன் * அணி ஆமென்னும்
பங்கய மாமலர் * பாவையைப் போற்றுதும் ** பத்தி எல்லாம்
தங்கிய தென்னத்தழைத்து நெஞ்சே! நம்தலை மிசையே *
பொங்கிய கீர்த்தி * இராமானுசன் அடிப் பூமன்னவே 108

பூ மன்னு மாது பொருந்திய மார்பன் * புகழ்மலிந்த
பாமன்னு மாறன் * அடி பணிந்துய்ந்தவன் ** பல்கலையோர்
தாம் மன்ன வந்த இராமானுசன் * சரணாரவிந்தம்
நாம் மன்னி வாழ * நெஞ்சே! சொல்லுவோம் அவன் நாமங்களே 1

- திருப்பல்லாண்டு பாசுரங்களைச் அனுஸந்த்தித்துக் கொண்டு ஆசாரியன் திருக்கைகளால் கற்பூர ஆலத்தி சமர்ப்பிக்கவும்.

**பல்லாண்டு**

** பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு *
பலகோடி நூறாயிரம் *
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! *
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ** 1

** அடியோமோடும் நின்னோடும் * பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு *
வடிவாய் நின் வல மார்பினில் * வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு *
வடிவார் சோதி வலத்துறையும் * சுடராழியும் பல்லாண்டு *
படைபோர் புக்கு முழங்கும் * அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ** 2

- கற்பூர ஆலத்தி முடிந்த பிறகு, திருத்துழாய், புஷ்பம் ஆகியவற்றை ஆழ்வார், ஆசாரியர்கள் கோஷ்டிக்கு சமர்ப்பிக்கவும்.
- “அருளப்பாடு ஆழ்வாராதிகள்”, “அருளப்பாடு எம்பெருமானார்”, “அருளப்பாடு மணவாள மாமுனிகள்”, “அருளப்பாடு ஆசாரியன்’ என்று சொல்லி பெருமாள் தீர்த்தம் சமர்ப்பிக்கவும்.

## உபதேச இரத்தினமாலை

ஆழ்வார்கள் வாழி * அருளிச்செயல் வாழி *
தாழ்வாது மில்குரவர் தாம் வாழி * ஏழ்பாரும்
உய்ய * அவர்கள் உரைத்தவைகள் தாம் வாழி *
செய்ய மறை தன்னுடனே சேர்ந்து * 2

** பூருவாசிரியர்கள் * போதம் அனுட்டானங்கள் *
கூறுவார் வார்த்தைகளைக் கொண்டு நீர் தேறி **
இருள் தருமா ஞாலத்தே * இன்பம் உற்று வாழும் *
தெருள் தருமா தேசிகனைச் சேர்ந்து 72

** இந்த உபதேச ரத்தினமாலை தன்னைச் *
சிந்தை தன்னில் நாளும் சிந்திப்பார் ** எந்தை
எதிராசர் * இன் அருளுக்கென்றும் இலக்காகி *
சதிராக வாழ்ந்திடுவார் தாம் 73

## எறும்பியப்பா அருளிச்செய்தது

மன்னுயிர்காள் இங்கே மணவாள மாமுனிவன் *
பொன்னடியாம் செங் கமலப் போதுகளை உன்னிச் *
சிரத்தாலே தீண்டில் அமான் அவனும் நம்மை *
கரத்தாலே தீண்டல் கடன்

## பெரிய ஜீயர் அருளிச்செய்தது

ஸர்வதே3ச த3ஸாகாலே Sவ்யாஹத பராக்ரமா
ராமானுஜார்ய தி3வ்யாஞ்ஞா வர்த4தாம் அபி4வர்த4தாம்

## கந்தாடையண்ணன் அருளிச்செய்தது

ராமாநுஜார்ய தி3வ்யாஞ்யா ப்ரதிவாஸரம் உஜ்வலா
தி3க3ந்தவ்யாபிநீ பூ4யாத் ஸாஹி லோக ஹிதைஷிணீ

### எம்பெருமானார் அருளிச்செய்தது

ஸ்ரீமந்! ஸ்ரீரங்க3 ச்ரியம் அனுபத்3ரவாம் அனுதி3நம் ஸம்வர்த4ய
ஸ்ரீமந்! ஸ்ரீரங்க3 ச்ரியம் அனுபத்3ரவாம் அனுதி3நம் ஸம்வர்த4ய

### பெரிய ஜீயர் அருளிச்செய்தது

நம: ஸ்ரீசைல நாதா2ய குந்தீ நக3ர ஜன்மநே
ப்ரஸாத3லப்த4 பரம ப்ராப்ய கைங்கர்ய ஸாலிநே

### நம்பெருமாள் அருளிச்செய்தது

ஸ்ரீசைலேச த3யாபாத்ரம் தீ4ப4க்த்யாதி3 கு3ணார்ணவம்
யதீந்த்3ர ப்ரவணம் வந்தே3 ரம்யஜாமாதரம் முநிம்

### மடத்துப் பிள்ளை அருளிச்செய்தது

வாழி திருவாய்மொழிப் பிள்ளை * மாதகவால்
வாழும் * மணவாள மாமுனிவன் – வாழியவன் *
மாறன் திருவாய்மொழிப் பொருளை * மாநிலத்தோர்
தேறும்படி உரைக்கும் சீர்

### ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளிச்செய்தது

செய்ய தாமரைத் தாளிணை வாழியே *
        சேலை வாழி திருநாபி வாழியே *
துய்ய மார்பும் புரிநூலும் வாழியே *
        சுந்தரத் திருத் தோளிணை வாழியே *
கையும் ஏந்திய முக்கோலும் வாழியே *
        கருணை பொங்கிய கண்ணினை வாழியே *
பொய்யில்லாத மணவாள மாமுனி *
        புந்தி வாழி புகழ் வாழி வாழியே *
அடியார்கள் வாழ அரங்க நகர் வாழ *
        சடகோபன் தண்டமிழ் நூல் வாழ * கடல் சூழ்ந்த
மன்னுலகம் வாழ * மணவாள மாமுனியே *
        இன்னும் ஒரு நூற்றாண்டிரும்

### ஆண்டாள்

கோதை பிறந்த ஊர் கேவிந்தன் வானும் ஊர் *
சோதி மணிமாடம் தோன்றும் ஊர் *
நீதியால் நல்லபத்தர்கள் வானும் ஊர் *
நான் மறைகள் ஓதும் ஊர் வில்லிப்புதூர் வேதக்கோனூர் **
பாதகங்கள் தீர்க்கும் பரமனடி சேர்க்கும் *
வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ் *
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானுடரை *
வையம் சுமப்பதும் வம்பு *
திருவாடிப் பூரத்திற் செகத்துதித்தாள் வாழியே *
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே *
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே *
பெரும்பூதூர் மாமுனிக்கு பின்னானாள் வாழியே **
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே *
உயர ரங்கர்கேகண்ணி யுகந்தளித்தாள் வாழியே *
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே *
வண்புதுவை நகர்கோதை மலர்ப்பதங்கள் வாழியே *

### நம்மாழ்வார்

திருக்குறுகைப்பிரான் தம் திருவடிகள் வாழியே *
திருவான திருமுகத்துச் செவ்வி என்னும் வாழியே *
இருக்குமொழி என் நெஞ்சில் தேக்கினான் வாழியே *
எந்தை எதிராசர்க்கு இறைவனார் வாழியே **
கருக்குழியில் புகாவண்ணம் காத்தருள்வோன் வாழியே *
காசினியில் ஆரியனாய்க் காட்டினான் வாழியே *
வருத்தமற வந்தென்னை வாழ்வித்தான் வாழியே *
மதுரகவி  தம் பிரான் வாழி வாழி வாழியே

### எம்பெருமானார்

சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி *
திருவரையில் சாத்திய செந்துவராடை வாழி *

ஏராரும் செய்ய வடிவு எப்பொழுதும் வாழி *

இலங்கிய முன்னூல் வாழி இணைத் தோள்கள் வாழி **

சேராத துய்ய செய்ய முகச் சோதி வாழி *

தூமுறுவல் வாழி துணை மலர்க் கண்கள் வாழி *

ஈராறு திருநாமம் அணிந்த எழில் வாழி *

இனிதிருப்போடெழில் ஞான முத்திரை வாழியே *

அறு சமயச் செடி அதனை அடி அறுத்தான் வாழியே *

அடர்ந்து வரும் குதிட்டிகளை அறுத்துறந்தான் வாழியே *

செறு கலியைச் சிறிதுமறத் தீர்த்து விட்டான் வாழியே *

தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே **

மறை அதனில் பொருள் அனைத்தும் வாய் மொழிந்தோன் வாழியே *

மாறனுரைசெய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே *

அறமிகு நற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே *

அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே *

## மணவாள மாமுனிகள்

இப்புவியில் அரங்கேசர்க்கு ஈடளித்தான் வாழியே *

எழில் திருவாய்மொழிப்பிள்ளை இணை அடியோன் வாழியே *

ஐப்பசியில் திருமூலத்தவதரித்தான் வாழியே *

அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்றும் வாழியே **

எப்புவியும் ஸ்ரீசைலம் ஏத்த வந்தோன் வாழியே *

ஏராரும் எதிராசர் என உதித்தான் வாழியே *

முப்புரி நூல் மணிவடமும் முக்கோல் தரித்தான் வாழியே *

மூதரிய மணவாள மாமுனிவன் வாழியே *

## திருநாள் பாட்டு

செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடு நாள் *

சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசுபொலிந்திடு நாள் *

மந்தமதிப் புவிமானிடர் தங்களை வானிலுயர்திடு நாள் *

மாசறுஞானியர்சேரெதிராசர்தம் வாழ்வு முளைத்திடு நாள் **

கந்தமலர் பொழில்சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடு நாள் *
காரமர்மேனி அரங்கர்நகர்க்கிறை கண்கள் களித்திடு நாள் *
அந்தமில்சீர் மணவாளமுனிப்பரன் அவதாரம் செய்திடு நாள் *
அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலம் அதெனு நாளே *

ஸ்ரீமதே ரம்யஜாமாத்ரு முநீந்த்ராய மஹாத்மநே
ஸ்ரீரங்கவாஸிநே பூயாத் நித்யஸ்ரீநித்ய மங்களம்

- எம்பெருமான் திருவடிகளை சேவித்து, பெருமாள் தீர்த்தம், திருத்துழாய் ஸ்வீகரித்துக் கொண்டு பின்பு கோஷ்டிக்கு விநியோகம் செய்யவும்.

# பர்யங்காஸனம்

- “ஸ்ரீமதே நாராயணாய நம: ஸ்ரீம் ச்ரியை நம: பூ4ம் பூ4ம்யை நம: நீம் நீளாயை நம: ஸமஸ்தபரிவாராய ஸர்வ மங்களவிக்3ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் திருவடி நிலைகள் சாத்தியருள வேணும், புநர் பர்யங்காஸனத்திற்கு எழுந்தருள வேணும்” என்று ப்ரார்த்தித்து எம்பெருமான் திருவடிகளில் திருத்துழாய் சமர்ப்பிக்கவும்.
- அர்க்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து “ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் அர்க்4யம் கண்டருள வேணும்” என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- சுத்4தோ3த3க பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து படிகத்தில் சேர்த்து உத்தரணியை சோதிக்கவும்.
- இரண்டு தடவை பாத்4ய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து “ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் பாத்4யம் கண்டருள வேணும்” என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- சுத்4தோ3த3க பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து படிகத்தில் சேர்த்து உத்தரணியை சோதிக்கவும்.
- மூன்று தடவை ஆசமனீய பாத்திரத்திலிருந்து ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து “ஸ்ரீமதே நாராயணாய நம: ஆசாரியன் திருக்கைகளால் ஆசமனீயம் கண்டருள வேணும்” என்று சமர்ப்பித்து தீர்த்தத்தை படிகத்தில் சேர்க்கவும்.
- தனி வஸ்திரத்தின் (ஒரு பட்டு வஸ்திரம்) ஒரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால் எம்பெருமானுடைய திருப்பவளத்தையும், திருக்கைகளையும் சோதித்து, மற்றொரு நுனியால் ஆசாரியன் திருக்கைகளால் எம்பெருமானுடைய திருவடிகளை சோதித்து, வஸ்திரத்தை கண்களில் ஒற்றிக்கொள்ளவும்.
- அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டு எம்பெருமான் திருவடிகளில் திருதுழாய் சமர்ப்பிக்கவும்.

## ஸ்ரீ Sரணாக3தி க3த்3யம்

பக4வந் நாராயணாபி4மதாநுரூப * ஸ்வரூப ரூப கு3ணவிப4வ ஐSவர்ய * Sீலாத்3ய அநவதி4காதிSய * அஸங்க்2யேய கல்யாண கு3ணக3ணாம் * பத்3மவநாலயாம் * ப4க3வதீம் * Sரியம் * தே3வீம் * நித்யாநபாயினீம் * நிரவத்3யாம் * தே3வதே3வ தி3வ்ய மஹிஷீம் * அகி2ல ஜக3ந் மாதரம் * அஸ்மந் மாதரம் * அSரண்ய Sரண்யாம் * அநந்ய Sரண: Sரணம் அஹம் ப்ரபத்3யே *

மநோ வாக்காயை: * அநாதி3கால ப்ரவ்ருத்த * அநந்த அக்ருத்ய கரண க்ருத்யா கரண * ப4க3வத3பசார பா4க3வதாபசார * அஸஹ்யாபசாரரூப * நாநாவித4 * அநந்த அபசாராந் ** ஆரப்3த4கார்யாந் ** அநாரப்3த4கர்யாந் ** க்ருதாந் * க்ரியமாணாந் * கரிஷ்யமாணாSச ஸர்வாந் * அSேஷத: க்ஷமஸ்வ* அநாதி3கால ப்ரவ்ருத்தம் * விபரீதக்ஞாநம் * ஆத்மவிஷயம் * க்ருஸ்த்ந ஜக3த்3விஷயம்ச * விபரீதவ்ருத்தம் ச * அSேஷவிஷயம் * அத்3யாபி வர்தமாநம் வர்திஷ்யமாணம் ச * ஸர்வம் க்ஷமஸ்வ

## திருவாய்மொழி

அகலகில்லேன் இறையுமென்று * அலர்மேல்மங்கை உரைமார்பா *
நிகரில் புகழாய் உலகம் மூன்றுடையாய் * என்னையாள்வானே **
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் * திருவேங்கடத்தானே *
புகலொன்றில்லா அடியேன் * உனடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே * 6.10.10

## அபராதக்ஷாபணம்

உபசாராபதே3சேந க்ருதாந் அஹரஹர்மயா
அபசாராநிமாந் ஸர்வாந் க்ஷமஸ்வ புருஷோத்தம

- எம்பெருமானை ஆதிசேஷனில் எழுந்தருளப்பண்ணி, கோவிலாழ்வாரில் ஆதிசேஷனை எழுந்தருளப்பண்ணவும்.

# கோவிலாழ்வார் திருக்காப்பு சேர்த்தல்

பந்நாகாதீச பர்யங்கே ரமாஹஸ்தோபதாநகே
ஸுகம் சேஷ்வவ்ருஷாத்ரீச ஸுதர்சந ஸுரக்ஷித:
சங்க சக்ர கதமுக்யா திவ்யாயுதகணா: ஸதா
ஶ்ரீச ரக்ஷாவிதாநாய சக்த்யா ஜாக்ரத ஜாக்ரத
க்ஷீரஸாகர தரங்க சீகரா ஸார தாரகித சாருமூர்த்தயே
போகி போக சயநீய சாயிநே மாதவாய மது வித்விஷே நம:

### பெரியாழ்வார் திருமொழி

உறகல் உறகல் உறகல் * ஒண்சுடராழியே! சங்கே! *
அறவெறி நாந்தகவாளே! * அழகிய சார்ங்கமே! தண்டே! *
இறவு படாமலிருந்த * எண்மர் உலோகபாலீர்காள்! *
பறவையரையா! உறகல் * பள்ளியறைக்குறிக்கோண்மின் 5.2.9

அரவத்து அமளியினோடும் * அழகிய பாற்கடலோடும் *
அரவிந்தப் பாவையும்தானும் * அகம்படி வந்து புகுந்து *
வரவைத் திரைபலமோதப் * பள்ளி கொள்கின்றபிரானை *
பரவுகின்றான் விட்டுசித்தன் * பட்டினம் காவற்பொருட்டே * 5.2.10

பனிக்கடலில் பள்ளிகோளைப் * பழகவிட்டு * ஓடிவந்து என்
மனக்கடலில் வாழவல்ல * மாய மணாள நம்பீ! *
தனிக்கடலே! தனிச்சுடரே! * தனியுலகே என்றென்று *
உனக்கிடமாயிருக்க * என்னை உனக்கு உரித்தாக்கினையே * 5.4.9

- ஆசாரியன் திருவடிகளே சரணம் என்று ப்ரார்த்தித்துக்கொண்டு தெண்டம் ஸமர்ப்பிக்கவும். கோவிலாழ்வார் திருக்காப்பு சாத்தவும்.

## ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்
## ஜீயர் திருவடிகளே சரணம்